பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 193

ஞாயிற்றுக்கிழமை
08 ஜூன் 2025

வைகாசி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## ஐஸ் போதையுடன் ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஜூன் 8
வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 250 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் 40 வயதுடையவர் என்றும், அவர் கெருடாவில் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட் 14

## வட்டுவாகல் பால நிர்மாணம்: பணிகள் ஓகஸ்ட்டில் ஆரம்பம்


விரிவு பக்கம் - 14

செம்மணியில் புதைகுழி தொடர்பில்

# சந்தேகமான பகுதிகள் ட்ரோன் மூலம் ஆய்வு!

நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்க முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 8
செம்மணி சித்துப்பாத்தி மயான புதைகுழிக்கு அருகாக, மேலும் புதைகுழி அல்லது புதைகுழிகள் இருக்கலாம் எனக் கருதப்படும் பகுதிகளில் நேற்று ட்ரோன்கள் மூலம் ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. 14



சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி

## நீதி கிடைக்கும் பட்சத்தில் இரண்டு வாரத்தில் அகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 8
அரியாலை சித்துப்பாத்தி குற்றப் பிரதேசம், மனிதப் புதைகுழி என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், உரிய ஒதுக்கீடுகள் கிடைத்தால் இரண்டு வாரங்களில் மீண்டும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் 14

## கொள்கை ரீதியான கூட்டில் இணையவேண்டும் தமிழரசு!

கஜேந்திரகுமார் எம்.பி. அழைப்பு

கொழும்பு, ஜூன் 8
தமிழ்த்தேசியப் பேரவைக்கும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள கொள்கை ரீதியான ஒப்பந்தத்தை ஏற்று. 14

## பொதுமன்னிப்பிலும் ஊழல் மோசடியா?

அநுரவுக்கே தெரியாமல் நடந்ததாம்

கொழும்பு, ஜூன் 8
வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் அனுராதபுரம் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த டபிள்யூ.எச். அதுல திலக 14

## சட்டவிரோத சொத்து விரைவில் அரசுடமை

எம்.பி.க்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 8
நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களிடம் சட்டவிரோதமாகக் குவிக்கப்பட்ட சொத்துகள் இருந்தால், அவை அரசுடமையாக்கப்படும் என்று இலஞ்சம் மற்றும் மோசடித் தவிர்ப்பு ஆணைக்குழுவால் எச்சரிக் 14

## மதுபானசாலைப் பத்திரம் வழங்குவதாக வவுனியாவில் பெருந்தொகை மோசடி!

முன்னாள் ஈ.பி.டி.பி. உறுப்பினர் கைது!

மன்னார், ஜூன் 8
மதுபானசாலை அனுமதிப் பத்திரம் வழங்குவதாகத் தெரிவித்து, பெருந்தொகை மோசடியில் ஈடுபட்ட ஈ.பி.டி.பி.யின் முன்னாள் உறுப்பினர் வவுனியாவில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.
முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் முல்லைத்தீவு பகுதியைச் 14




## பாதுகாப்பு ஒப்பந்தங்களை வெளியிட அனுமதிக்குக!

இந்திய அரசாங்கத்திடம் இலங்கை விண்ணப்பம்!

கொழும்பு, ஜூன் 8
இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட இருதரப்புப் பாதுகாப்பு ஒப்பந்தங்களை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்துவதற்கு அனுமதிக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.
இந்தியப் பிரதமர் மோடி சில வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இதன்போது, இந்தியப் பிரதமர் மோடிக்கும், ஜனாதிபதி அநுரவுக்கும் 14

## காங்கேசன்துறையில் விரைவில் எரிபொருள் களஞ்சியசாலை!

அங்குரார்ப்பண நிகழ்வு இன்று அமைச்சர்கள் குழு வருகை!

யாழ்ப்பாணம், ஜூன் 8
காங்கேசன்துறையில் விரைவில் எரிபொருள் களஞ்சியசாலை அமைக்கப்படவுள்ள நிலையில், அதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது. 14

'ஊழலை ஒழிப்பம் எண்டவை இப்ப மன்னிப்புக் குடுக்கிறதில ஊழல் செய்திருக்கினமெண்டால் பாருங்கோவன்'

## யாழ்.நகரில் வாள்வெட்டு இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூன் 8
யாழ்ப்பாணம் நகரப் பகுதிக்கு அண்மித்ததாக உள்ள நான்காம் குறுக்குத்தெருப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் சகோதரர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.
நான்கு மோட்டார்சைக்கிள்களில் வந்த 14




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கொவிசெத**
திகதி 07.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 4095 | ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 02 15 34 42 | விசேட எழுத்து F

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 07.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 1162 | வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 04 05 38 47

**NLB ஜய**
திகதி 07.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 0121 | ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 0 4 1 6

**மெகா பவர்**
திகதி 07.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 2201 | ஆங்கில எழுத்து N | சுப்பர் இலக்கம் 03
வெற்றி இலக்கங்கள் 37 43 67 68

**மஹஜன சம்பத**
திகதி 07.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 5853 | ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 2 6 0 0 2 6

**தன நிதானய**
திகதி 07.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 1883 | ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 06 12 75 82 | விசேட எழுத்து X

**அத சம்பத**
திகதி 07.06.2025 | சீட்டிழுப்பு இலக்கம் 0428 | ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 0 0 2 6

# மக்கள் செல்வாக்கை இழக்கிறது அரசு!

## ஹெக்டர் அப்புஹாமி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 8**
**நாட்டில் 50 வீதத்துக்கும் அதிகமான மக்கள் தற்போது இந்த அரசுக்கு எதிராக மாறியுள்ளனர். இதனால் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து மீதமுள்ள உள்ளூராட்சிசபைகளில் ஆட்சி அமைக்கும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் கூறுகையில், மக்கள் ஆணை என்றால் என்னவென்று அரசுக்குத் தெரியவில்லை.

இந்தத் தேர்தல் முடிவுகளின்படி, அரசுக்கு 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இந்த எதிர்ப்பு இருக்கின்ற நிலையில்தான் அரசுக்குப் பெரும்பான்மை இல்லாத சபைகளில், மக்கள் ஆணை வழங்காத சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு அரசு முயற்சிசெய்கிறது.

எதிர்க்கட்சிகள் ஒவ்வொரு சபையிலும் அதிகமாக உள்ளன. அவர்கள் ஒன்றிணைந்து தவிசாளரைத் தெரிவுசெய்யும் ஏற்பாடு உள்ளூராட்சிசபைச் சட்டத்தில் உள்ளது. அதைத்தான் நாம் செய்யவுள்ளோம் - என்றார். (ச-75)

**சுபிரி தன சம்பத**
திகதி 07.06.2025 | தினம் சனிக்கிழமை | வெற்றி வாரம் 0561
ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கம் 8 2 9 5 6 2

**Super Ball DLB**
திகதி 31.05.2025 | தினம் சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2827 | ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 03 11 50 79

**சனிதா DLB**
திகதி 07.06.2025 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 30 59 61 64 | வெற்றி வாரம் 4988

**SASIRI DLB**
திகதி 07.06.2025 | தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0699 | வெற்றி இலக்கம் 20 37 46

**லக்ன ராசி DLB**
திகதி 07.06.2025 | தினம் சனிக்கிழமை
சிம்மம் | வெற்றி இலக்கம் 02 10 30 43 | சீட்டிழுப்பு வாரம் 4539

**KAPRUKA DLB**
திகதி 07.06.2025 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து B | சுப்பர் இலக்கம் 01 | வெற்றி இலக்கம் 10 17 54 55 | வெற்றி வாரம் 2003

**அத கோடிபதி DLB**
திகதி 07.06.2025 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 04 14 31 39 | வெற்றி வாரம் 2653



# ஆளுங்கட்சியின் கவசமாக சி.ஐ.டி.

## தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 8
ஆளுங்கட்சியினரைப் பாதுகாப்பதற்கும், எதிரணியினரை ஒடுக்குவதற்குமான கருவியாக சி.ஐ.டி. பயன்படுத்தப்பட்டுவருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

323 கொள்கலன்கள் விவகாரம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக தயாசிறி ஜயசேகர சி.ஐ.டி.யினரால் நேற்றுமுன்தினம் வரவழைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது சி.ஐ.டி. வளாகத்தில் வைத்து ஊடகங்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

துறைசார் அமைச்சர் மற்றும் கொள்கலன்களை விடுவித்தவர்களைத்தான் சி.ஐ.டி.க்கு அழைக்கவேண்டும். ஆனால் தகவல்களை வெளியிட்டவர்களே இங்கு அழைக்கப்படுகின்றனர். எனவே, என்ன நடக்கின்றது எனப் பார்ப்போம். சி.ஐ.டி. என்பது அரசாங்கத்துக்குரியதாக மாறியுள்ளது போலும். ஆளுங்கட்சியினரைப் பாதுகாப்பதற்கும், எதிரணியினரை ஒடுக்குவதற்கும் அது பயன்படுத்தப்பட்டுவருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# பஸ் சாரதியின் அவசரம்; உடைந்தது பயணியின் கை

யாழ்ப்பாணம்,ஜூன் 8
இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து, பயணி இறங்குவதற்கு முன்னர் பேருந்தைச் செலுத்தியதால் குடும்பப்பெண் ஒருவர் வலதுகை எலும்பு உடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுச் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பேருந்து சாரதிகள் பயணிகளில் அக்கறை இல்லாமல் பேருந்தைச் செலுத்துவதோடு பயணிகள் இறங்குவதற்கு முன்னர் அவசர அவசரமாகப் பேருந்தைச் செலுத்துகின்றனர். இதனால் பயணிகள் பாதிக்கப்படுகின்றனர் எனப் பேருந்தில் பயணித்தோர் சுட்டிக்காட்டினர். (ச-159)

# நுண்நிதிக் கடன்கள் பாதிப்பு அரசாங்கத்தால் நிவாரணம்

கொழும்பு, ஜூன் 8
நுண்நிதிக் கடன்களால் நாட்டிலுள்ள பெரும்பாலான பெண்கள் தொடர்ச்சியாக பல சிக்கல்களுக்கு முகங்கொடுத்துவரும் நிலையில் நுண்நிதிக் கடன்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக உபக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக அதிகாரமளித்தல் தொடர்பான அமைச்சக ஆலோசனைக் குழுவால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, இவ்விடயம் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை முன்மொழிய, நாடாளுமன்ற உறுப்பினர் சமன்மலி குணசிங்க தலைமையில் உபக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நுண்நிதிக் கடன்களால் கிராமப்புறப் பெண்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் நுண்நிதிக் கடன் பிரச்சினையை எதிர்கொள்ளும் மக்களுக்கு உதவுவதற்காக, தொடர்புடைய நிறுவனங்களின் அதிகாரிகளை அழைத்து விவாதிக்கவும், பொருத்தமான திட்டங்களை முன்வைக்கவும் இந்தக் குழு நடவடிக்கை எடுக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# அடுத்த தலைவர் நாமலே



## இந்திக்க அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 8
இந்த அரசு வீழ்ச்சியடைந்துகொண்டுசெல்கிறது. அடுத்த தலைவர் நாமல் ராஜபக்சதான் என்ற நிலைக்கு மக்கள் வந்துள்ளனர் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்ற அரசு, உள்ளூராட்சிசபைத் தேர்தலில் 23 இலட்சம் வாக்குகளை இழந்துள்ளது.

இது அரசுக்குக் கிடைத்த வீழ்ச்சியாகும். மொட்டுக்கட்சி வேண்டாம் என்று கூறி மக்கள் நிராகரித்தார்கள். ஆனால் இந்தத் தேர்தலில் மீண்டும் மொட்டுக்கட்சியின் வாக்குவங்கி அதிகரித்துள்ளது.

நாமல்மீது மக்களுக்கு இப்போது நம்பிக்கை வந்துள்ளது. இந்த நம்பிக்கையை உடைக்காது புதிய தலைமுறைக்குப் பொருந்தக்கூடிய அரசியற் செயற்பாட்டை நாம் முன்னெடுத்துச்செல்லவுள்ளோம்.

அடுத்த தலைவர் நாமல்தான் என்ற நிலை இப்போது தோன்றியுள்ளது.-என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில் விபத்து; இருவருக்குப் படுகாயம்!

யாழ்., ஜூன் 8
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு அருகாமையில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர். சைக்கிளில் சென்ற இருவர் மீது வேகமாகப் பயணித்த வாகனமொன்று மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இதையடுத்து, காயமடைந்த இருவரும் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ம-27)


## சாரதி தேவை

சிறியரக மற்றும் நடுத்தர வாகன சாரதிகள் தேவை
கட்டிடப் பொருள் ஏற்றி இறக்க கூடியவர்கள் தேவை
நேரில் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு - சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரேர்ஸ்
இல 55/57 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## நாகபூஷணி திருமண சேவை இடமாற்றம்

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(துர்க்கா மணிமண்டபத்துக்கு அண்மையில்)
மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றி வைக்கப்படும்.
077 138 7596 , 071 999 9306
(CS3325) (D) D*

## வேலைக்கு உடனடியாக ஆட்கள் தேவை

சமையல், ரொட்டி போடுபவர் தேவை.
சைவம், அசைவம்
வேலையாட்கள் தேவை.
077 929 2093, 076 672 1867

## கடை வாடகைக்கு உண்டு

சுன்னாகம் - மருதனார் மடம் இடைப்பட்ட பகுதியில் KKS Road முகப்புடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.
வர்த்தக/ வணிக தேவைகள்/ Office/ கடைகள்/ Phone shop/ Textile/ Pharmacy நடத்த உகந்த இடம்.
போதுமான வாகன தரிப்பிட வசதியுண்டு
தொடர்புகளுக்கு
076 124 1537 , 077 017 9041 , 077 116 3338

## மருதனார் மடம் K.K.S வீதியில் அறைகள் வாடகைக்கு உண்டு

சுன்னாகம் மருதனார் மடம் K.K.S வீதியில் நவீன வசதிகளுடன் கூடிய புதிதாக அமைக்கப்பட்ட அறைகளை கொண்ட மாடித் தொகுதி வாடகைக்கு உண்டு.
ஹோட்டல்கள் மற்றும் guest house நடாத்துவதற்கு பொருத்தமானது.
போதியளவு வாகன தரிப்பிட வசதியுண்டு.
தொடர்புகளுக்கு
076 124 1531 , 077 017 9041
077 116 3338
(CS3346) (A) D*


## மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 04 . 1941
மறைவு 04 . 06 . 2025

### மேரிறீற்றா குகதாசன்

யாழ் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மேரிறீற்றா குகதாசன் அவர்கள் கடந்த (04.06.2024) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சூசைப்பிள்ளை-மேரிமாகிரட் (செல்லம்) தம்பதியினரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சரவணையைச் சேர்ந்த நெத்தாரிஸ் வினாசித்தம்பி-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வினாசித்தம்பி குகதாசன் (பாலசிங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சாந்தினி மற்றும் சத்தியபாலன் (ரஞ்சன்-சுவிஸ்), சத்தியசீலன் (றோகன்-ஜேர்மனி), ரஞ்சினி (கனடா), றோகினி (கொழும்பு), சத்தியகுமார் (சாந்தன்-ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கைகோ, மகேந்திரன், ராஜா, எலினா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான ஜோர்ச், எட்வேட், மேரிஸ்ரெலா மற்றும் எமிலியானஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிலோமினா, றேணுகா, ரெஜி மற்றும் காலஞ்சென்றவர்களான சீவரட்ணம், வேலாயுதபிள்ளை, மனோண்மணி, மங்களம், பாக்கியம் தெய்வேந்திரம் (ஆசிரியர்), காசிப்பிள்ளை, பொன்னுத்துரை (அதிபர்), நடராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2024) திங்கட்கிழமை மதியம் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நாரந்தனை புனித பேதுபவுள் ஆலயத்தில் மதியம் 3.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பேதுபவுள் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 411 3034,
077 298 4444
077 654 4014

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 02 . 02 . 1944
மறைவு 12 . 05 . 2025

கடந்த 12.05.2025 திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் இராமசாமி சோமசுந்தரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (09.06.2025) திங்கட்கிழமை காலை 5.00 மணியளவில் "கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும்" வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (11.06.2025) புதன்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் **எமது இல்லத்தில்** நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 105, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
பிரபாகரன் - 077 788 9455
பிரபாலினி - 074 242 3099

(CS 58470) E-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 12 . 1949 | மறைவு 06 . 06 . 2025



**மரியதாசன் தொம்மாசி (யசிந்தா)**

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், இல 120, டேவிட் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாசன் தொம்மாசி அவர்கள் நேற்று முன்தினம் (06.06.2025) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி மேரிமெக்டலின் தம்பதியின் புதல்வியும், காலஞ்சென்ற அந்தோனி சிசிலியா தம்பதியின் அன்பு மருமகளும், மரியதாசனின் (ஓய்வு பெற்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்) அன்பு மனைவியும், யூட்நோமன் (இலங்கை மின்சார சபை), பிராங்கிளின் ஜெரிஸ் (NDB Bank) ஆகியோரின் பாசமிகு தாயும் மரியவிமலகுயின்சி, பிரமதுரா (Cargills Bank) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜேய்ஷன் நெவின், ஜேய்லன் நிக்ஹில், பிரித்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற பெலிசித்தம்மா (கமலம்) மற்றும் அருளம்மா (லொறற்ரி), தோமஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜேசுதாசன், காலஞ்சென்ற அருளானந்தம், மேரிஸ்ரெலா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி நாளை (09.06.2025) திங்கட்கிழமை பிற்பகல் 03.30 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**120, டேவிட் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**ம.பிராங்கிளின் ஜெரிஸ்-(மகன்)**
**077 248 7795**

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 08 . 1938 | மறைவு 04 . 06 . 2025



**சாமிநாதன் சிங்கராசா**
(முன்னாள் சமாதான நீதவான் , ஓய்வு பெற்ற வரி மதிப்பாளர்)

யாழ்ப்பாணம் மல்வம் உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சாமிநாதன் சிங்கராசா அவர்கள் (04.06.2025) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமிநாதன் - விக்டோறியா அவர்களின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சாலமோன் - மரியம்மா அவர்களின் மருமகனும் சிறப்பீனம்மா அவர்களின் அன்பு கணவரும் சில்வறி தியோயினஸ் (டலஸ்) அருட்சகோதரி டெல்சியா, சில்வறி தியோடியஸ் (டயஸ்), றோசறி ஜெக்குலின் (டன்சி), றோசறி விக்டோறியா (டதினி), றோசறி சார்மினி (டலிமா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இனசென்ரா, ஜெயா, காந்தன், கெனடி, டன்ஸ்ரன் ஆகியோரின் மாமனாரும், ஒல்வியா, எவ்லின், மக்றீனா மக்கப்பியாஸ், திவ்வியன், வலன்ரீனோ, வின்சென்ட்ரியா, பொன்பிலியா, கபிறியா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான பிலிப் மாணிக்கம், சின்னம்மா, ஞானமுத்து, பர்ணாந்து, திருச்செல்வம், பூரணம், நேசம்மா ஆகியோரின் அன்புத்தம்பியும் காலஞ்சென்றவர்களான சிசிலியா, தம்பிப்பிள்ளை, சின்னமணி, லூர்துமலர், மகேந்திரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவூடல் நாளை (09.06.2025) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கணக்காளர் தேவை

யாழ் கொக்குவில் பகுதியில் இயங்கி வருகின்ற தனியார் நிறுவனமொன்றிற்கு கணக்காளர் (பெண்) தேவை.
வயது எல்லை 25 தொடக்கம் 50 வரை முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு:**
**077 583 3045, 074 315 7964**

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ் நகரப்பகுதியில் வீடு வாடகைக்கு உண்டு. (சிறிய குடும்பம் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு: 077 345 0039
077 348 0039

## விற்பனைக்குண்டு

மாலை கட்டுவதற்கு உகந்த மல்லிகைப்பூ (காட்டு மல்லி)
1Kg-1500/=

தொடர்பு: **077 940 3281**

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 27 பரப்பு காணி விற்பனைக்கு**


- 18அடி பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதி ஊரெழு பிள்ளையார் கோயில் முன்வீதி 150m, தூரத்தில்
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், செம்மண் காணி,
- குடியிருப்புக்கள் சூழவுள்ள காணி
- ஒரு பரப்பின் விலை இருபத்தி ஐந்து லட்சம் 25,00 000/=மட்டுமே

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

**தொடர்பு : 076 739 0413 / 077 623 4204**

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 12 . 1940 | மறைவு 06 . 06 . 2025



**பொன்னம்பலம் சண்முகலிங்கம்**
**(உரிமையாளர் - ஜெயந்தி ஜீவலர்ஸ்)**

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், கொட்டாஞ்சேனை கொழும்பு, 13 வசிப்பிடமாகவும், கொண்ட பொன்னம்பலம் சண்முகலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (06.06.2025) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், கணேசமூர்த்தி - மகிழ்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், பாலகுமார், ஜெயந்தி, செந்தில்குமார், சுகந்தி, கம்ஷானந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மாதரன், செந்தில்குமார், வனஜா, திருச்செல்வி, ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மொறனை இந்து மயானத்திற்கு காலை 10.00 மணியளவில் எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம் நாட்டின் போஷாக்கு

இடைத்தரகர்கள் குறுக்கீடின்றி எமது பாற்பண்ணையாளர்களை நேரடியாக அணுகி,
அவர்களது உழைப்புக்கும், வியர்வைக்குமான பெறுமதியை வழங்கி,
அவர்களை சௌபாக்கியத்தால் நிரப்பிடுவோம்.
புத்துணர்வான பால் மூலம் போஷாக்கு நிறைந்த எமது உற்பத்திகளை வழங்கி
உங்கள் வீட்டிலுள்ளவர்களுக்கு முழுமையான போஷாக்கினை நாம் வழங்குவோம்.

நவீன தொழில்நுட்பத்துடன், நிலையான உற்பத்தி செயன்முறைகள் ஊடாக
சூழலுக்கு நேயமான உற்பத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை நாம் உறுதிப்படுத்துவோம்.
கொத்மலே ஆகிய நாம் முழு நாட்டினதும் போஷாக்கிற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

ஒவ்வொரு இலங்கையருக்கும் நாளாந்தம் தேவைப்படும் போஷாக்கினை பெற்றுக்கொடுக்க உதவிடும் வகையில்
தேசிய பால் உற்பத்தியினை அதிகரிப்பதும் பால் உற்பத்திகளை இலகுவான மற்றும் சிறந்த விலையில்
கிடைக்கப் பெறச்செய்வதுமே கொத்மலே இனரான எமது உறுதிப்பாடாகும்.

A QUALITY Cargills PRODUCT

நம் நாட்டின் போஷாக்கு

Kotmale


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய

**மேடம்:** திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சிதரும் செய்தி வந்துசேரும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு தாயின் தேவைகளை நிறைவேற்றி, அவருடைய ஆசிகளைப் பெறும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்றுத் தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு முக்கிய பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் தொடர் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன்வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். வாழ்க்கைத்துணை வழி உறவுகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கிய முடிவுகளை பிற்பகலுக்கு மேல் மேற்கொள்வது சாதகமாக முடியும். பிற்பகலுக்கு மேல் தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்துசேரும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்றுவருவீர்கள்.


**விருச்சிகம்:** மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு:** மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்கு பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ள நேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**கும்பம்:** சகோதரர்களுக்காக செலவுசெய்ய வேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடுவதையும் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் திருமஞ்சத் திருவிழா கடந்த வியாழக்கிழமை இரவு சிறப்பாக இடம் பெற்றது. (ச-17)



# இந்து மகளிர் கல்லூரியில் சுற்றுச்சூழல் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 8

உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு "பிளாஸ்ரிக் மாசுபாட்டை இல்லாதொழிப்போம்" எனும் கருப்பொருளிலான விழிப்புணர்வு நிகழ்ச்சி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. கல்லூரியின் அதிபர் திருமதி சுமதி கந்தசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நிகழ்ச்சியின் இறுதியில் மாணவிகளிடையே சூழல் தொடர்பான வினாவிடைப் போட்டி நடத்தப்பட்டு வெற்றிபெற்றவர்களுக்குத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினால் பரிசில்கள் வழங்கப்பட்டதோடு, கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகளும் நடுகைசெய்யப்பட்டன. (ச-25-66-27)




# இந்தியத் தூதரகத்தால் மீன்பிடிவலை கையளிப்பு

ஊர்காவற்றுறைக் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு மீன்பிடி வலைகளும் உலர்ந்த அத்தியாவசியப் பொருள்களும் இந்தியத் தூதரகத்தால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளியின் பங்கேற்பில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-25-27-125)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு, ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை மாணவன் க.பிரணவன் ஆன்மீக உரை ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம் பரமேஸ்வரி அம்பாள் ஆலயப் பரிபாலனசபையினரின் கோரிக்கைக்கு அமைவாக ஆலயத்தின் புனருத்தாரணப் பணிகளுக்காக 50 ஆயிரம் ரூபா நிதி சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் வழங்கிவைக்கப்பட்டது. (ச-25,66)




# விழிப்புணர்வுச் செயலமர்வு

வேலணை, ஜூன் 8

மாற்றம் அறக்கட்டளை அமைப்பு மற்றும் யாழ். சமூக செயற்பாட்டு மையம் ஆகியன இணைந்து "மகிழ்வான குடும்ப வாழ்வுக்கு அன்னையர்களின் பங்கு" எனும் கருப்பொருளில் செட்டிபுலம் சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த புதன்கிழமை செயலமர்வை நடத்தின. செயலமர்வில் வளவாளர்களாக வேலணைப் பிரதேச செயலகப் பிரிவின் போதைப்பொருள் தடுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் அன்ரன் பிறேம், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. கே.ஜனனி, சமூக சேவைகள் பிரிவின் உளவளத் துணையாளர் திருமதி.ஜி.ஜெசிக்கா ஆகியோர் கலந்துகொண்டு கருத்துகளை பகிர்ந்துகொண்டனர். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தானே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு செயலின் குணங்களைப் பொறுத்துத்தான் அவனுடைய எதிர்கால வெற்றி தோல்விகள் கணிக்கப்படும்.

— டார்வின்—

# பிளாஸ்ரிக்கைத் தோற்கடிப்பது எப்போது?

உலக சுற்றுச்சூழல் தொடர்பான நிகழ்வுகள் அண்மைக்காலமாக இடம்பெற்றுவருகின்றன. 'பிளாஸ்ரிக் மாசுபாட்டை இல்லாதொழிப்போம்' என்ற தொனிப்பொருளில் இந்த வருடத்துக்கான நிகழ்வுகள் நடைபெற்றிருக்கின்றன. பிளாஸ்ரிக் எனும் பேரரக்கன் பெரும் துன்பமாக வியாபித்துவரும் நிலையில், காலத்தேவையான விடயமாகவே இந்த வருடத்துக்கான தொனிப்பொருள் அமைந்துள்ளது என்றால் அது மிகையல்ல. பிளாஸ்ரிக்கை அழிப்பது தொடர்பில், கடந்த பல தசாப்தங்களாகவே உலகளாவிய செயற்றிட்டங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. ஆனால், இதுவரை அந்தப் பாதையில் எந்தவொரு காத்திரமான முன்னேற்றத்தையும் மனிதகுலம் கண்டடையவில்லை என்பதே உண்மை.

மக்களிடம் பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பவற்றுக்கான தேவைப்பாடு அதிகமாக இருப்பதால் அதனைத் தடைசெய்வதோ அல்லது கட்டுப்படுத்துவதோ சாத்தியப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகக் காணப்படுகின்றது என்பதே உலக நாடுகளின் பொதுவான விளக்கம். ஆனால் குறைந்தபட்சம் மறுசுழற்சியையேனும் உலக நாடுகளால் உறுதிப்படுத்தமுடியவில்லை என்பதே தற்போதைய பெரும் பிரச்சினை. பாவித்த கழிவுகளாக மாறும் இந்த பிளாஸ்ரிக், பொலித்தீன் உள்ளிட்டவற்றை சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதமாகப் பெருகவிடாமல், பாதுகாப்பாகச் சேகரித்து ஒன்றாக்க வேண்டும். பின்னர் அவற்றை மீள்சுழற்சி மையங்களுக்கு அனுப்பிவைத்து திரும்பவும் அவற்றைப் பயன்படுபொருளாக மாற்றலாம். இது பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளால் சூழல் மாசுபாடு, பிற உயிரினங்களுக்குத் தீங்கு போன்ற பிரச்சினைகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கான முதற்கட்டத் தீர்வாக இருக்கும்.

பிளாஸ்ரிக் கழிவு சுற்றுச்சூழலுக்கு பாதகமாக மாறுவதற்கு உலகநாடுகளின் திட்டக்குறைபாடு மட்டுமல்ல பொதுமக்களின் சமூகப் பொறுப்பற்ற செயல்களும் ஒரு காரணமாக அமைந்துள்ளன என்பதே உண்மை. முகாமைத்துவச் செயற்றிட்டங்களில் கட்டுப்பாடுகள் இல்லாமல் இருப்பதால் பெரும்பாலும் பொதுமக்கள் தங்களுடைய சமூகப் பொறுப்பை மறந்துவிட்டு தன்னலமாகச் செயற்படவே முயற்சிக்கின்றனர். மக்கள் அவ்வாறு சமூகப் பொறுப்பற்றவர்களாக இருக்கமுடியாது. சமூகப் பொறுப்பின்மை ஒருகாலத்தில் அவர்களுக்கே பாதகமாகிவிடும். அத்தகைய நிலைமை ஏற்படாதவண்ணம் ஒவ்வொரு பொதுமகனும் தங்களுடைய நகரம், தமது பிரதேசம், தாம் வாழுகின்ற கிராமம் என்ற நோக்கில் செயற்படவேண்டும். இலங்கை போன்ற தீவு நாடுகள் பூமியின் வெப்ப அதிகரிப்பால் கடல்நீர் மட்டம் உயர்ந்து அழிவை நோக்கி நகர்ந்துசெல்கின்றன. ஆதலால், பிளாஸ்ரிக்குக்கு எதிரான திட்டங்களை வினைத்திறனாக முன்னெடுத்து உலக நாடுகளுக்கு முன்மாதிரியைக் காட்டவேண்டிய பெரும் பொறுப்பு இலங்கைக்கு உண்டு. அத்தகைய காலக் கடமையில் இருந்து தவறியவர்களாக நாங்கள் ஒருபோதும் வரலாற்றில் பதிவாகக் கூடாது.




# தன்னிச்சையாகச் செயற்படின் உப்புக்கும் கட்டுப்பாட்டுவிலை



## வர்த்தக அமைச்சர் அறிவுறுத்து

கொழும்பு, ஜூன் 8

**அதிக இலாபம் ஈட்டும் நோக்கில் உப்பின் விலையை நியாயமற்ற முறையில் அதிகரிப்பதற்கு எவராவது முயற்சித்தால், எதிர்காலத்தில் உப்புக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டுறவு வங்கிக் கட்டமைப்பு உள்ளிட்ட கூட்டுறவுத் துறையை நெறிமுறைப்படுத்துவதற்குப் புதிய சட்டங்களை விரைவில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது பொதுமக்களுக்கு உப்பு தட்டுப்பாடு இல்லாமல் கிடைத்தாலும், சந்தையில் உப்பின் விலை அதிகரிக்கப்படுவது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன. எனவே, அதிக இலாபம் ஈட்டும் நோக்கில் உப் பின் விலையை நியாயமற்ற முறையில் அதிகரிப்பதற்கு எவராவது முயற்சித்தால், எதிர்காலத்தில் உப்பிற்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-இ)

# ஹெரோய்னுடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 8

ஹெரோய்ன் போதைப் பொருளுடன் இருவரை மானிப்பாய் பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

மானிப்பாய் இணுவில் பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருப்பதாக மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இரு இளைஞர்களை சோதனையிட்டனர்.

இருவரிடமும் இருந்து தலா 20 மில்லிகிராம் வீதம் 40 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-125)

# மே மாதத்தில் 6,042 பேருக்கு டெங்கு



கொழும்பு, ஜூன் 8

மே மாதத்தில் மாத்திரம் 6,042 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனத்தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அண்மைய தரவுகள் தெரிவித்துள்ளன.

மார்ச் மாதத்தில் 3,766 பேரும் ஏப்ரல் மாதத்தில் 5,166 பேரும் பதிவாகியுள்ளனர். இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில், 23,744 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். 2025 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 13 பேர் டெங்குக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளனர். பருவமழை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (ச-இ)

# மாவா பாக்குடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம்,ஜூன் 8

ஆனைக்கோட்டை சாவற்கட்டுப் பகுதியில் வைத்து மாவா பாக்குடன் இளைஞர் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். 26 வயதுடைய சந்தேகநபரிடமிருந்தே 15 மில்லிகிராம் மாவா கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-125)

# மருத்துவ வல்லுநர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூன் 8

நிறைவுகாண் தொழில் மருத்துவ வல்லுநர்களால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை நேற்றுக் காலை 8 மணிக்கு நிறைவுக்கு வந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. நோயாளர்களுக்கு ஏற்படும் சிரமத்தைக் கருத்திற்கொண்டு வேலைநிறுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவர தீர்மானித்ததாக நிறைவுகாண் மருத்துவத் தொழில் வல்லுநர்கள் ஒன்றியத்தின் செயலாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார். இருப்பினும், மருத்துவ ஆய்வக வல்லுநர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தொழில்வாய்ப்புகளுக்கேற்ப எம்மை தயார்ப்படுத்தவேண்டும்

## வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம்,ஜூன் 8**

**எதிர்காலத்தில் இங்கு முதலீட்டாளர்கள் ஊடாக தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்படும்போது அதில் பங்கெடுக்கும் வகையில் எம்மை நாம் தயார்ப்படுத்திக்கொள்ளவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

'பி.எல்.சி. கம்பஸின்' இணைவுவிழா வலம்புரி ஹோட்டலில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர், நிறுவனத்தின் விரிவுரையாளர்களுக்கான கௌரவத்தை வழங்கிவைத்தார். அதன்பின்னர் தனது உரையில் அவர் தெரிவித்ததாவது:

நாங்கள் கல்வி கற்கின்ற காலத்தில் வாய்ப்புகள் மிகக் குறைவு. எங்களுக்கு அப்போதிருந்த தெரிவு அரசாங்கத்தின் பல்கலைக்கழகம் மட்டுமே. ஆனால் இன்று அப்படியல்ல. இங்கு பல தனியார் கல்வி நிறுவனங்கள் செயற்படுகின்றன. அதனூடாக உயர்கல்வி கற்பதற்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன. கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் அரசாங்கப் பல்கலைக்கழகத்துக்கு வாய்ப்புக் கிடைக்காவிட்டால் அன்று வேறு தெரிவு என்பது குறைவாக இருந்தது. ஆனால் இன்று பல தெரிவுகள்,வாய்ப்புக்கள் உங்கள் முன்னால் இருக்கின்றன. இன்று வேலைவாய்ப்பு என்பது சவாலானதாக உள்ளது. அரசாங்க வேலைவாய்ப்பாக இருக்கலாம், தனியார்துறை வேலைவாய்ப்பாக இருக்கலாம் எதுவென்றாலும் அவை சவாலானதாகவே இருக்கின்றன.

ஆட்சிமாற்றத்தின் பின்னர் முதலீட்டாளர்கள் வடக்கை நோக்கி முதலிடுவதற்கு வருகின்றார்கள். வெகுவிரைவில் இங்கு தொழிற்சாலைகள் உருவாகும். வேலைவாய்ப்புகள் கிடைக்கும். இதற்கேற்ற வகையில் எம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும் - என்றார். (ச-27)

### மருத்துவ நிபுணர்கள் போராட்டம்

# நோயாளர்கள் அவதி

வவுனியா, ஜூன் 8

நிறைவுகாண் மருத்துவ நிபுணர்கள் நாடளாவிய ரீதியில் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தம் இரண்டாவது நாளாக நேற்றுமுன்தினம் தொடர்ந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

குறித்த போராட்டமானது பதவி உயர்வுகள், வார இறுதி மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள், பட்டதாரி ஆட்சேர்ப்புச் சிக்கல், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான ஒப்பந்தங்களைப் புறக்கணித்தல், ஓய்வூதிய நிபந்தனைகள் மற்றும் பயிற்சிகள் போன்ற பிரச்சினைகளை முன்னிறுத்தி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-110)

# ரூபா உயர்வு

கொழும்பு, ஜூன் 8

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி கடந்த வியாழக்கிழமையுடன் ஒப்பிடுகையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணயமாற்று வீத அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 294 ரூபா 98 சதமாக பதிவாகியுள்ளது. அத்துடன் விற்பனை விலை 303 ரூபா 40 சதமாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# டெங்கு நோயாளர்களில் 25 வீதமானோர் மாணவர்கள்

கொழும்பு, ஜூன் 8

நாட்டில் பதிவான டெங்கு நோயாளர்களில் சுமார் 25 வீதமானோர் பாடசாலை மாணவர்கள் எனத் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

50 வீதமான பாடசாலைகளில் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளதாக அதன் சமூக மருத்துவ நிபுணர் பிரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

அவற்றில் 14 வீதமான இடங்களில் நுளம்பு குடம்பிகள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 24,361 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்நிலையில் மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைச் சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதை உறுதிசெய்வது மிகவும் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# வண்ணார்பண்ணையில் விசர்நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள வண்ணார்பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. ஓர் நாய்க்கான ஊசிக்குரிய கட்டணமாக 100 ரூபா அறவிடப்படும்.

09.06.2025 அன்று மு.ப.9 மு.ப.- 11மணி வரை பிறவுன் றோட் கலட்டி வீதியிலும், மு.ப.11- பி.ப.1 மணி வரை மெதடிஸ் மிசன் பாடசாலை கலட்டி இராமநாதன் வீதியிலும், பி.ப.2.30-பி.ப.4 மணி வரை சபாபதி ஒழுங்கை தலையாழி வைரவர் கோவில் வீதியிலும்,11.06.2025 அன்று மு.ப.9 மு.ப.-11 மணி வரை தாமரை வீதி முருகன் கோவிலடியிலும், மு.ப.11-பி.ப.1 மணி வரை பெரியம்பிரான் வீதி வெற்றிமாதா கோவிலடியிலும், பி.ப.2.30 - பி.ப. 4 மணி வரை வள்ளுவன் சனசமூக நிலையத்திலும், 12.06.2025 அன்று மு.ப.9 - மு.ப.11 மணி வரை வீரகத்தி பிள்ளையார் கோவிலடி சீனியர் ஒழுங்கையிலும், மு.ப.11-பி.ப.1 மணி வரை ஆரோக்கிய மாதா கோவிலடி கஸ்தூரியார் வீதியிலும், பி.ப.2.30-பி.ப.4 மணி வரை கனகசபை வீதியிலும், 13.06.2025 அன்று மு.ப.9மு.ப.-11 மணி வரை சைவ பரிபாலனசபை நீராவியடியிலும், மு.ப.11-பி.ப.1 மணி வரை பிறவுன் வீதி 1 ஆம் ஒழுங்கை, பி.ப.2.30-பி.ப.4 மணி வரை சிவகுருநாதர் வீதி ஓட்டுமடம், 16.06.2025 அன்று மு.ப.9 -மு.ப.11 மணிவரை ஞானக்குழந்தை பாலர் பாடசாலை அரசடி வீதியிலும், மு.ப.11-பி.ப.1 மணி வரை பிறவுன் வீதி 2 ஆம் ஒழுங்கையிலும், பி.ப.2.30-பி.ப.4 மணி வரை அன்னசத்திர லேன் நாவலர் வீதியிலும், 17.06.2025 அன்று மு.ப.9-மு.ப.11 மணி வரை பலாலி வீதி 4 ஆம் ஒழுங்கை, மு.ப.11.00-பி.ப.1 மணி வரை குமாரசாமி வீதி ஆச்சிரமத்திலும், பி.ப.2.30-பி.ப.4 மணி வரை ஆத்திசூடி சனசமூக நிலையத்திலும், 18.06.2025 அன்று மு.ப.9 மு.ப.-11 மணி வரை ஐயனார் கோவிலடி வண்ணை வைத்தியசாலை முன்பாகவும், மு.ப.11-பி.ப.1 மணி வரை இளையதம்பி பாடசாலை முன்பாகவும், பி.ப.2.30-பி.ப.4 மணி வரை கலைவாணி சனசமூக நிலையம் ஓட்டுமடத்திலும், 20.06.2025 அன்று மு.ப.9 மு.ப.11 மணி வரை முருகமூர்த்தி வீதி ஐங்கரன் சனசமூக நிலையத்திலும், மு.ப.11-பி.ப.1 மணி வரை கே.கே.எஸ் வீதி கலைவாணி முன்பாகவும், பி.ப.2.30-பி.ப.4 மணி வரை பூநாறி ஒழுங்கை காலைக்கட்டு சந்தியிலும், 23.05.2025 அன்று மு.ப.9-மு.ப.11 மணி வரை மிலேனியம் லேன் இராமநாதன் வீதியிலும், மு.ப.11-பி.ப.1 மணி வரை நாவலடியும், பி.ப.2.30-பி.ப.4 மணி வரை நடமாடும் சேவை கல்ட்டிச்சந்தியிலும் விசர்நோய்த் தடுப்பூசிகள் ஏற்றப்படும் (ச-25)

# தற்காலிக வதிவிட விசாக்காலம் பிலிப்பைன்ஸுக்கு அதிகரிப்பு



கொழும்பு, ஜூன் 8

பிலிப்பைன்ஸ் பிரஜையை திருமணம் செய்யும் இலங்கையர்களுக்கு 5 வருட தற்காலிக வதிவிட விசாக்களை வழங்கும் நடவடிக்கையை அந்நாட்டு அரசாங்கம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது.

இதற்கு முன்னர் இலங்கையர்களுக்கு வதிவிட விசாக்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டன, மேலும் அதை அடிக்கடி புதுப்பிக்கவேண்டிய தேவையும் இருந்தது.

இந்தநிலையில் பிலிப்பைன்ஸ் அரசாங்கம் வதிவிட விசா செல்லுபடியாகும் காலத்தை இரண்டு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாக நீடித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. உணவு, தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிர்வாகி
077 810 6857, 075 974 2495, 021 226 5551

(CS/58478) J-1

## தேவை

றபர்ஸ்ராம், பிளாஸ்டிக் நேம் போட், வாகன நம்பர் பிளேட் தயாரிக்கும் கலையகத்தில் வேலை பழக விரும்பும் ஓரளவு ஆங்கிலம் தெரிந்த பெண் ஒருவர் தேவை. நேரில் வரவும்.

**வீமா ஆட்ஸ் 262, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி - யாழ்ப்பாணம்**

## தென்னங்காணி விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில்
19 பரப்புக்களாகப் பிரிக்கப்பட்ட 02 காணித் துண்டுகள் அருகருகில் விற்பனைக்கு உண்டு.
வீடு கட்டுவதற்கும் உகந்த காணி.
கொடிகாமம் நகரத்திலிருந்து 2.5 கி.மீ. தூரத்தில்

தொடர்புகளுக்கு: **077 327 6500**

## வேலையாள் தேவை

தோட்டவேலை செய்வதற்கு ஆள் தேவை. 45 - 50 வயதிற்குட்பட்டவர்கள் தங்கிநின்று வேலை செய்வதற்கு விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- **077 977 3286**

## வீடு விற்பனைக்கு

தெகிவளையில் 15 பேர்ச் காணியில் மாதம் 120 ஆயிரம் வாடகை தரும் 9 அறைகள் உள்ள வீடு விற்பனைக்கு உள்ளது.
**1 பேர்ச் 53 இலட்சம்**

(CR 45108) E-1

தொடர்பு: **071 484 0610**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
1 சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

(CS 29842) E-1

தொடர்பு: **077 334 1281**

## வேலைவாய்ப்பு

VANNI INN

எமது நிறுவனத்தில் பணியாற்ற உங்களுக்கு ஓர் சந்தர்ப்பம்.
அனுபவமுள்ள / அனுபவமற்றவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.
தகைமை - O/L சித்தி பெற்றவர்கள்
தொடர்புகளுக்கு
**077 652 5074, 077 720 4489**

நிர்வாகம்

## வேலைக்கு ஆள் தேவை

கொழும்பில் தங்கி நின்று வேலை பார்ப்பதற்கு 40-65 வயதிற்கு இடைப்பட்ட வீட்டுப் பணிப் பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**077 365 2452**

## வீடு வாடகைக்கு

நல்லூர் ஆலயத்திற்கு மிக அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீட்டின் முதலாம் மாடி தளபாடங்கள், 5அறைகள், 2 குளியலறைகள், கோள், கிச்சின், டைனிங் ஏரியா மற்றும் வாகனத் தரிப்பிடத்துடன் வாடகைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:
**077 350 1812**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் ஆண் (V) 1991 சித்திரை நட்சத்திரம் 7 செவ்வாய் உடைய அரச பணியாற்றும் மணமகனிற்கு மணமகள் தேவை.

(CS/58510) K-1

**071 205 2313**

## காணி விற்பனைக்கு

உசன் கஜகேணி பிள்ளையார் கோவில் வீதி, தொந்தியா வேட்டையில் பயன்பதரும் தென்னை மரங்களுடன் காணி விற்பனைக்கு உண்டு.

(CR/0066) J-1

**076 072 0341**

## மணிவிழா வாழ்த்து

**யா/ நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்ப கல்வி சிரேஸ்ட ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் பணியாற்றி 08.06.2025 அன்று பணி ஓய்வு பெறும்**




திருமதி
**புவனேஸ்வரி சிவகுமாரன்**
(BA, பயிற்றப்பட்ட ஆரம்ப கல்வி SLTS- I)

அவர்களை ஓய்வுகாலம் சிறக்க அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

(CS/58494) J-1

**சேவைக்காலம்**

- 27.01.1998 - 14.02.2010 யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை.
- 15.02.2010 - 31.12.2019 யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்.
- 01.01.2020 - 21.03.2022 யா/ கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை.
- 22.03.2022 - 08.06.2025 யா/ நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
**யா/நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை.**

## வீடு விற்பனைக்கு

சுன்னாகம் கதிரமலை வீதி (முருகேசு பண்டிதர் வீதி) K.K.S வீதி அருகாமையில் 2 3/4 பரப்பு காணியுடன் நல்ல நிலையில் உள்ள 3 Room, 1 Bathroom, வாகனத் தரிப்பிடத்துடன் சுற்று மதில் கட்டிய Gate போடப்பட்ட வீடு தரமான உறுதிப்பத்திரங்களுடன் 3 கோடி. தரகர் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

S.P Karan's : **077 343 4005**

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தை, பம்பலபிட்டிய, தெஹிவளையில் Furnished Apartment மற்றும் நிலத்துடன் வீடு நாள், வார, மாத வாடகைக்கு உண்டு. வெளிநாட்டிலிருந்து வருபவர்கள்/ விசேட வைபவங்களுக்கு வருபவர்களும்/ சிகிச்சைகளுக்கு வருபவர்களுக்கு உகந்தது

**077 737 3083** (இந்திரன்)

## சன்சக்தி ரேடர்ஸ் பிறைவேற் லிமிட்டட்

SST தகவல் தொழில்நுட்பம் பாதுகாப்பு வழங்குநர்

**யாழில் அமைந்துள்ள சன்சக்தி ரேடர்ஸ் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனத்திற்க பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன...**

- **கண்காணிப்பு கமரா பொருத்துனர் - ஆண் (CCTV Technician – male)**

**Requirements:**
**ஐபி கமரா மற்றும் அனலொக் கமரா** (IP camera and Analog camera) **பொருத்தல் தொடர்பான அறிவு இருத்தல்.**
**கணினி மற்றும் சமூக ஊடகங்களை கையாளுதல் தொடர்பான அறிவு இருப்பவர்களிற்கு முன்னுரிமையும் அதிக ஊதியமும் வழங்கப்படும்.** (Computer knowledge, social media is preferred)

- **பகுதிநேர அலுவலக பணியாளர் (பெண்) Office Girl**

**Requirements:**
**கணினி அறிவு உடையவர்கள்** (MS office) **விரும்பத்தக்கது.**
**சமூக ஊடகங்கள்** (Social media) **கையாளத்தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.**

**ஊதியம் : திறமைக்கேற்ற ஊதியத்துடன், ஊழியர் சேம நிதியும் (EPF) வழங்கப்படும்.**

**Typing, photo copy, accounting knowledge is an advantage both genders can apply.**

**இடம் : சன்சக்தி ரேடர்ஸ் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம்.
இல 395, கண்டி வீதி, மாம்பழம் சந்தி,
யாழ்ப்பாணம்**

தொடர்புகளுக்கு: 0775527099/0770072433

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கேதீச்சர ஆலயத்தில் திருக்கல்யாண உற்சவம்

மன்னார், ஜூன் 8

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்தப் பெருவிழாவின் விசேட திருவிழாவான திருக்கல்யாண உற்சவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெற்றுவரும் நிலையில், விசேட திருவிழாவான திருக்கல்யாண உற்சவம் ஆலயத்தின் பிரதமகுரு தியாகராஜா கருணானந்தக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. இன்று ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், அதனைத் தொடர்ந்து தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. (ச-41-56)



# உலக சுற்றாடல் தின விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 8

உலக சுற்றாடல் தின விழிப்புணர்வு நிகழ்வு சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்ற சனசமூக நிலையத்தில் தலைவர் சு. ஸ்ரீகுமரன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

'பிளாஸ்ரிக் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருதல்' எனும் தொனிப்பொருளின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் விழிப்புணர்வு உரைகள் இடம்பெற்றதுடன் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் திண்மக் கழிவகற்றும் வாகனத்தின் உதவியுடன் நடமாடும் கழிவு சேகரிப்பு இடம்பெற்றது. (ச-22)

# மன்னாரில் ஹஜ் பெருநாள்

மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலில் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைகள் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றன. காலை 6.45 மணிக்கு பெண்களுக்கும் காலை 7.30 மணிக்கு ஆண்களுக்கும் பெருநாள் தொழுகைகள் இடம்பெற்றன. இதன்போது ஹஜ்ஜுப் பெருநாளின் முக்கியத்துவம், அல்குர்ஆன் சமய நற்சிந்தனைகள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது. (ச-25,56)



சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்புத்தினத்தை முன்னிட்டு, 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற சமுர்த்தி கொடி தின நிதி சேகரிப்பு வேலைத்திட்டத்தில் கூடிய நிதியை சேகரித்த கள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு மாவட்டச் செயலக் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-25, 9)







# கரைச்சிக் கோட்டத்தில் விளையாட்டுப்போட்டி

கிளிநொச்சி, ஜூன் 8

கிளிநொச்சி கரைச்சிக் கோட்டப் பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. கரைச்சிக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் சு. தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதமவிருந்தினராக கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டி.எம். அசேல கே திஸாநாயகே, சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி இலங்கை வங்கி முகாமையாளர் பா. உபேந்திரா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப. பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25,113

இலங்கை - அமெரிக்க நாடாளுமன்ற நட்புறவுச் சங்கக் குழு உறுப்பினர்கள், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கின் அழைப்பின் பேரில் கொழும்பில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். (ச-25,66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளின்றி பலாலி விமானநிலையம்

## பொதுமக்கள் அந்தரிப்பு

**யாழ்ப்பாணம், ஜீன் 8**

**புதிதாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண சர்வதேச விமானநிலையம் அடிப்படைவசதிகளற்றுக் காணப்படுவதால் விமானநிலையத்துக்கு வருகைதரும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

பலாலி விமான நிலையத்திலிருந்து இந்தியாவுக்கு இரண்டு விமான சேவைகள் இடம்பெற்றுவருகின்றன. குறித்த விமானநிலையத்தை தினமும் அதிகளவானோர் பயன்படுத்தி வருகின்றனர்.

குறித்த விமான நிலையத்தில் குடிதண்ணீர் வசதி, நிழல் கொட்டகைகள் உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுகின்றது.

இந்த நிலையில் தமது உறவுகளை அழைப்பதற்காகச் செல்லும் மக்கள் வெளியில் தங்குவதற்கு நிழல் கொட்டைகள் ஏதும் அமைக்கப்படாத நிலையில் வெயிலேயே வாடி வேண்டியுள்ளதுடன் குடிதண்ணீருக்காக அலையவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது என்றும் மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதேவேளை இரத்தமலானையிலிருந்து யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்துக்கு சேவையில் ஈடுபடுவதற்காக பரீட் சார்த்த விமானம் அண்மையில் வருகைதந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-20)



## சூட்சுமமாக மரக்குற்றி கடத்தல் சாவகச்சேரியில் முறியடிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 8

சல்லிக்கற்களுக்குள் மறைத்து சூட்சுமமாக காட்டுத் தேக்குமரக்குற்றிகளைக் கடத்திச் சென்ற டிப்பர் சாவகச்சேரிப் பொலிஸாரினால் கையகப்படுத்தப்பட்டதுடன் அதன் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை நடந்துள்ளது. சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாலிதசெனவிரத்னவின் வழிகாட்டலில் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின்போதே இந்தக் குற்றச்செயல் முறியடிக்கப்பட்டது.

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மரக்குற்றிகளைக் கடத்திச்சென்றபோதே சாவகச்சேரி நகர்ப்பகுதியில் வைத்து இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரை சான்றுப்பொருள்களுடன் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-28)



உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலையத்தினரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிரதமதானப்பணியினை மேற்கொள்ளப்பட்டது. இதில் கிராமமட்ட உத்தியோகத்தர்களும், சனசமூக அபிவிருத்தி அலுவலரும் கலந்துகொண்டனர். (ச-25,9)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 8

உரும்பிராய் ஞானவைரவர் கோவிலடி சனசமூக நிலையத்தின் முழுநிலா நாள் கருத்தரங்கு எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 4.30 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது.

நிலையத்தின் தலைவர் இரா.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் "புதிய கூட்டுக்கள் நம்பிக்கைகளைப் புதுப்பிக்குமா" எனும் தொனிப்பொருளில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் கருத்துரை வழங்குவார். கருத்தரங்குக்கு உரும்பிராய் உட்புறச் சந்தை ஆஞ்சநேயர் களஞ்சியத்தினர் அனுசரணை வழங்குவர். (ச-25)



ஊரெழு சிவபூரணி காளி அம்மன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு, ஊரெழு சைவ ஆலயங்களின் ஒன்றியத்தினால் கட்டுரைப் போட்டிகள் ஊரெழு கணேச வித்தியாசாலையில் நேற்று சனிக்கிழமை நடத்தப்பட்டது.

பல பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மாணவர்கள் இதில் பங்குபற்றினர். (ச-25)



உலக சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளிப் பிரதேச முன்பள்ளிகளில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மரக்கன்றுகள் நடுகைசெய்யப்பட்டன. (ச- 25,9)

## வாக்கெடுப்புச் சின்ன வடிவமைப்புப்போட்டி முதல்பரிசு 1000 அமெரிக்க டொலர்!

யாழ்ப்பாணம்,ஜூன் 8

மக்கள் வாக்கெடுப்பு இயக்கத்தின் சின்னத்திற்கான வடிவமைப்புப் போட்டி ஒன்று நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் நடத்தப்படவுள்ளது.

குறித்த போட்டியில் உருவாக்கப்படும் சின்னத்தில் பின்வரும் குறிப்புகள் பிரதிபலிக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரம், சுயநிர்ணய உரிமை, ஜனநாயகம் மற்றும் இலங்கைத் தீவின் வடகிழக்குப் பிராந்தியத்தின் புவியியல் இருப்பிடம் மற்றும் "தமிழர்களின் முடிவெடுக்கும் உரிமை" "TAMILS RIGHT TO DECIDE" என்ற இரு வசனங்களும் ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சேர்க்கப்படவேண்டும்.

சின்ன வடிவமைப்புக்கான விதிமுறைகளாக, சின்னம் சிறியது முதல் பெரியது வரை பல்வேறு அளவுகளில், உரை உட்பட தெளிவாகப் படிக்கக்கூடியதாக இருக்க வேண்டும், சின்னம் பல வண்ணங்களில் (மஞ்சள் மற்றும் சிவப்பு நிறங்களுக்கு முக்கியத்துவம்கொடுக்கப்படவேண்டும்) இருக்கவேண்டும், சின்னம் சதுர அல்லது வட்ட வடிவத்தில் இருக்கலாம். சின்னம் முற்றிலும் தனித்துவமான சொந்தப் படைப்பாக இருக்கவேண்டும், சின்னம் உயர் தெளிவுத்திறன் கொண்ட வடிவத்தில் (JPEG, PNG அல்லது VECTOR கோப்புகள்) சமர்ப்பிக்கப்படவேண்டும்.

இந்தப் போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு முதல் பரிசாக 1,000 அமெரிக்க டொலரும் இரண்டாவது பரிசாக தலா 5 பேருக்கு 100 அமெரிக்க டொலரும் வெற்றிப்பரிசாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆக்கங்களை சமர்ப்பிக்கவேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 15.06. 2025 என்பதுடன், pmo@tgte.org எனும் மின்னஞ்சலுக்கு இந்த ஆக்கங்களை அனுப்பிவைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இப்போட்டியில் ஆர்வமுள்ள அனைவரும் பங்குபெற்றமுடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச)




## உறுதிபூசுதல் நிகழ்வு

மன்னார், ஜூன் 8

மன்னார் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயப் பங்கில் பேசாலைப் பங்குத்தந்தை அருட்பணி எஸ். சத்தியராஜ் அடிகளாரின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் 71 இளைஞர், யுவதிகளுக்கு நேற்றுசனிக்கிழமை உறுதிபூசுதல் வழங்கப்பட்டது. இதன்போது குருமுதல்வர் தமிழ்நேசன் அடிகளார், மறைமாவட்ட ஆயர் இல்ல நிதிப் பொறுப்பாளர் அருட்பணி சுரேந்திரன் றெவல் அடிகளார், பங்குத்தந்தை உட்பட மேலும் அருட்பணியாளர்கள் கலந்துகொண்டு கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுத்தனர். (ச-25,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## இராசையா செல்வராசா

புகையிரத நிலைய வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட இராசையா செல்வராசா அவர்கள் நேற்று முன்தினம் (06.06.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஞானதேவியின் அன்புக் கணவரும், சின்னத்தம்பி - தெய்வானை ஆகியோரின் மருமகனும், காலஞ் சென்ற தர்மராஜா மற்றும் தங்கராஜா, ஆனந்தராஜா, ஜெயராசா, செல்வராணி, ஜெயராணி காலஞ்சென்ற சிவராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற உதயரூபன் மற்றும் ரூபிணி (லண்டன்), உதயசிவம் (Uthaya store), கௌசலா (பிரான்ஸ்), உதயராஜ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயகுமார் (லண்டன்), தர்ஜினி, தயாபரன் (பிரான்ஸ்), நிருஜா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், கார்த்திக், சாம்பவி, கிருத்திகா, கனுசிகா, லக்ஷயா, கவினயா, பிரார்த்தனா, அக்ஷயா, அக்வித் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை **(09.06.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்** அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

புகையிரதநிலைய வீதி,
மல்லாகம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 899 6142

(CR/58595) J-1

# மரண அறிவித்தல்



## அல்பிரட் நிர்மலாதேவி

சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும், மாரிசன்கூடல், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிரட் நிர்மலாதேவி அவர்கள் நேற்றுமுன்தினம் (06.06.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பகவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பஸ்தியாம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அல்பிரட் (சமரக்கோன்) அவர்களின் பாசமிகு மனைவியும், கமலஸ்கிறேசியன் (பிரான்ஸ்), அன்ரனி (பிரான்ஸ்), தனேஸ் (பிரான்ஸ்), சசிக்கலா (ஆசிரியை - கிளி/ அல்லிப்பளை சி.சி.த.க.பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிடோனி (பிரான்ஸ்), கீர்த்தி (பிரான்ஸ்), அருள் ஜெயநேசன் (AJN Distributer(PVT)Ltd) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மிக்கேல், மைலின், ஒந்துவான், ஜலின், எமிலின் மதுலின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், லலிதாதேவி, கமலாதேவி, மல்லிகாதேவி, காலஞ்சென்ற பாக்கியலட்சுமி மற்றும் மாலினி (பிரான்ஸ்), வளர்மதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான மரியதாஸ், நட்சத்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் புகழுடல் நாளை (09.06.2025) திங்கட்கிழமை பிற்பகல் 02.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்க ஆராதனைக்காக புனித அன்னாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம்
21.11.1956

மறைவு
06.06.2025

இல 4, மாரிசன்கூடல்
இளவாலை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
077 538 6979, 077 955 6198

(CR/58511) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொள்கலனில் புலிகளின் ஆயுதம்? நிராகரித்தது பாதுகாப்பு அமைச்சு

**கொழும்பு, ஜூன் 8**

**தாய்லாந்தில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆயுதங்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா வெளியிட்டுள்ள தகவலை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது.**

"இது தொடர்பான நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்தை முற்றாக நிராகரிக்கின்றோம்" என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர எயார் வைஸ் மார்ஷல் சம்பத் தூயகொந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா, "தாய்லாந்தில் இருந்த கொள்கலன்களில் எமது பிரபாகரனின் பொருள்களே (ஆயுதங்கள்) இருந்தன. 2009க்கு முன்னர் கொண்டுவருவதற்கு பிரபாகரன் முயற்சித்த தாய்லாந்தில் எஞ்சி இருந்த பொருள்களே (ஆயுதங்களே) கே.பி. ஊடாக இங்கு கொண்டுவரப்பட்டுள்ளன என மக்கள் கதைக்கின்றனர்.

ஆயுதம் உள்ளிட்ட பொருள்களே கொள்கலன்களின் வந்தன என்று எனக்கு டயஸ்போராக்கள் தெரிவித்தனர்.

இதனை என்னால் நிரூபிக்க முடியாது. எனினும் பொறுப்புடனேயே கூறுகின்றேன்" என்று சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டார் . இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம், வானொலி அலைவரிசை ஒன்று வினவியபோதே அவர் இதனை முற்றாக நிராகரித்துள்ளார். (எ-44)

**இலாபகரமான வியாபார ஸ்தாபனம் விற்பனைக்கு**

ISO மற்றும் Organic சான்றளிக்கப்பட்ட தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஆலை

- சுத்தமான Virgin தேங்காய் எண்ணெய் தயாரிக்கும் ஆலை
- சாதாரண மற்றும் வெள்ளை தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஆலை
- தேங்காய் எண்ணெய் விற்பனை நிலையம்
- தளபாடங்களுடன் கூடிய அலுவலகம்
- விமான நிலையத்தையும் துறைமுகத்தையும் இலகுவாக அணுகலாம்.
- அனைத்து இயந்திரங்களும் நல்ல நிலையில் இயங்குகின்றது.

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும் அல்லது WHAT'S APP

**+94 75 967 6277**

# மஹோற்சவம்!

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடமராட்சி தும்பளை அருள்மிகு தம்புறுவளை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்றுவருகிறது.

வருடாந்த மஹோற்சவத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும் நாளைமறுதினம் திங்கட் கிழமை தேர் உற்சவமும் இடம்பெறவுள்ளன.

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவம் இடம்பெற்று அன்றையதினம் மாலை கொடியிறக்கம் இடம்பெறவுள்ளது. (ச-33-100)



# பொன். சிவகுமாரனின் 51 ஆவது நினைவுதினம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

போராளிகள் நலன்புரிச் சங்கம், சமூக விஞ்ஞான ஆய்வு மையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், தியாகி பொன். சிவகுமாரனின் 51 ஆவது நினைவுதினம் போராளிகள் நலன்புரிச் சங்கத்தினரின் தலைமையில் உரும்பிராயில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன்போது, தியாகி பொன் சிவகுமாரனின் சகோதரி பொன். சிவகுமாரி சிவகுமாரனின் சிலைக்கு முன்பாக ஈகைச்சுடர் ஏற்றியதைத் தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், தமிழ்த் தேசியக் கட்சி உறுப்பினர்கள், சமூக விஞ்ஞான ஆய்வுமைய உறுப்பினர்கள், போராளிகள் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25)





# வலயமட்ட குண்டெறிதலில் மூளாய் மாணவன் சாதனை

யாழ்ப்பாணம், ஜூன் 8

வலிகாமம் வலயமட்ட 17 வயது ஆண்கள் பிரிவு குண்டெறிதல் போட்டியில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவன் கு. டனுசன் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். (ச- 25,555)

# ஆய்வுரையும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஜூன் 8

'காஸா இனப்படுகொலையும் கொலனிய நீக்கத்தின் தோல்வியும்' எனும் தொனிப்பொருளில் போயா தின மாதாந்த நிகழ்வாக ஆய்வுரையும் கலந்துரையாடலும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் சந்தி கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் தொடக்கவுரையை ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கமும் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ம.திருவரங்கனும் நிகழ்த்துவர். ஆர்வலர்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐஸ்...

டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

## வட்டுவாகல்...

முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தை நிர்மாணிக்கும் பணிகள், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படும் என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தை நிர்மாணிக்கும் பூர்வாங்கப் பணிகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. நந்திக்கடல், வட்டுவாகல் பாலத்தின் மாதிரித் திட்டம் இறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார்.

முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலத்தை நிர்மாணிப்பதற்கு, 2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## கொள்கை...

இலங்கைத் தமிழரசுக் கட்சியும் கூட்டு முயற்சிக்கு இணங்கவேண்டும் என்று தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியப் பேரவைக்கும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் கூட்டு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் எங்கள் கூட்டணியில் இடம்பெற்றுள்ள சித்தார்த்தனும், சுரேஷ் பிரேமச்சந்திரனும் ஈபிடிபியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்திக்கப்போவதாகவும், உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பாக அவருடைய ஆதரவைக் கோரவிருப்பதாகவும் சில ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகத்தைச் சந்திப்பதற்கு ஏற்கனவே முடிவெடுத்திருந்த நிலையில், தமிழரசுக் கட்சி ஈ.பி.டி.பி.யினருடன் நடத்தவிருந்த சந்திப்பையும், கூட்டையும் நியாயப்படுத்துவதற்காகவே தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்கு மிகவும் விசுவாசமாகச் செயற்படும் ஊடகங்கள் திட்டமிட்டுப் பொய்யான செய்திகளைப் பரப்பின.

அந்தச் செய்தி தமிழ்த் தேசியப் பேரவைக்கும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான ஒப்பந்தத்தைக் கொச்சைப்படுத்துவதற்காகத் திட்டமிட்டுப் பரப்பப்பட்ட செய்தி. இதனை நாங்கள் நிராகரிக்கின்றோம், கண்டிக்கின்றோம். தமிழ்த்தேசியப் பேரவையும், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியும் கொள்கை ரீதியானதொரு இணக்கத்துக்கு வந்துள்ள சூழ்நிலையில் நாங்கள் அந்தக் கொள்கையின் வழியில் நேர்மையாகப் பயணிப்பதில் மிகவும் உறுதியாகவிருக்கின்றோம்.

2025ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்மக்கள் தமிழ்த் தேசியத்துக்கு மிகப் பலமானதொரு ஆணையை வழங்கியிருந்தனர். தமிழ்த் தேசியப் பேரவையும், ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியும் எவ்வாறொரு கொள்கை இணைக்கப்பாட்டுக்கு வந்தனவோ அதேபோன்று தமிழரசுக் கட்சியும் எம்முடன் ஒரு கொள்கை இணக்கப்பாட்டுக்கு வந்து அதனூடாக ஓர் உறுதித்தன்மையை ஒவ்வொரு உள்ளூராட்சிசபைகளிலும் உருவாக்குவதே பொருத்தமான விடயமாகும். அதனை விடுத்து மக்கள் வழங்கிய ஆணைக்கு நேர்மாறாகச் செயற்படுகின்ற தரப்புகளுடன் கூட்டுச்சேருவதும், ஏற்கனவே தமிழ்த் தேசியத் தரப்பில் உருவாக்கப்பட்டுள்ள பலமானதொரு கூட்டைத் தோற்கடிக்கும் வகையில் செயற்படுவதும் பொருத்தமற்றது. இவ்வாறான செயற்பாடுகள் தமிழ்த் தேசியத்துக்கும், மக்களுக்கும் பெரும் ஏமாற்றத்தையளிக்கும்.

கொள்கைக்கு மாறாக, தமிழ்த்தேசியத்துக்கு நேர்மாறாக தமிழ்த்தேசியத்தை அழிக்கச் செயற்படும் தரப்புகளுடன் கூட்டிணைந்து பதவிகளைப் பெறுவது தான் நோக்கமாகவிருந்தால் தமிழ்த் தேசியத்துக்காகச் செயற்படும் எங்கள் தரப்புடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளில் பதவிகளைப் பெறுவதற்கு நாங்கள் ஒத்துழைக்கத் தயாராகவிருக்கின்றோம். பேரினவாதக் கட்சிகளையும், பேரினவாதக் கட்சிகளுக்குத் துணைபோகின்ற கட்சிகளையும் நிராகரிக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் தமிழ்மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் தங்கள் வாக்குகளை அளித்திருந்தனர். ஆகவே, வாக்குகளைப் பெற்ற பின்னர் பேரினவாதக் கட்சிகளுக்கு முழுமையாகத் துணைபோகின்ற கட்சியிடம் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்கு ஆதரவு கேட்டு நிற்பது முற்றிலும் தவறானதொரு செயல் - என்றார். (அ-ம-66)

## பொது...

ரட்ன என்ற கைதி விடுவிக்கப்பட்டார் என்றும், இந்த விடுவிப்பின் பின்னணியில் ஊழல் மோசடிகள் உள்ளன என்றும் ஜனாதிபதி செயலகம் கவனமெடுத்துள்ளது.

அரசியலமைப்பின் 34 (1) பிரிவின் படி, கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. அதன்படி, விடுவிப்புக்காக சிறைச்சாலை அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கைதிகளின் பட்டியல் நீதி அமைச்சுக்கு அனுப்பப்படும். இந்தப் பட்டியல் நீதி அமைச்சால் பரிசீலிக்கப்பட்டு ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பப்படுகிறது. அதன்படி, ஜனாதிபதியின் அனுமதியுடன், குறித்த கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும்.

இந்த நடைமுறைகளின் கீழ் 388 கைதிகள் கடந்த வெசாக் பண்டிகையின் போது ஜனாதிபதியால் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளனர். எனினும், அனுராதபுரம் சிறைச்சாலையில் நிதி மோசடி தொடர்பாக சிறையிடப்பட்ட மேற்படி நபரின் பெயர் அந்தப் பட்டியலில் எங்கும் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

அதாவது, ஜனாதிபதியால் பொது மன்னிப்புக்காக அனுமதிக்கப்பட்ட 388 பெயர்களில் அந்த நபரின் பெயர் இல்லை. எனவே, இந்த மோசடியான நடவடிக்கை தொடர்பில், ஜனாதிபதி செயலகத்தால் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-இ)

## மதுபானசாலைப்...

சேர்ந்த ஒருவரிடம் மதுபானசாலை அனுமதிப் பத்திரம் பெற்றுத் தருவதாகக் கூறி ஒரு கோடியே 80 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றார் என்ற குற்றச்சாட்டு அவருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட நபர், ஈ.பி.டி.பி.யின் வவுனியா நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திலீபனுடன் இணைந்து செயற்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் நீதிமன்ற உத்தரவுக்கமைய எதிர்வரும் வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-110)

## பாதுகாப்பு...

இடையில் இந்திய - இலங்கைப் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக வலியுறுத்திவருகின்றன.

எனினும், பாதுகாப்பு ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களை ஒரு நாட்டின் அனுமதி இல்லாமல் மற்றைய நாட்டால் பகிரங்கப்படுத்தமுடியாது என்பது இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதியாகக் காணப்படுகின்றது. இதையடுத்தே, ஒப்பந்தத்தை வெளிப்படுத்துவதற்காக இலங்கை அரசு இந்திய அரசின் அனுமதியைக் கோரியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு இந்திய அரசாங்கம் அனுமதியை வழங்கும் பட்சத்தில், அந்த ஒப்பந்தம் இலங்கை நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தப்படும். (அ-ம-75)

## யாழ்...

நால்வரைக் கொண்ட குழுவே இந்த வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-ம-22)

## காங்கேசன்...

இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-ம-26)

## நிதி...

என்று சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணி சித்துப்பாத்தி புதைகுழி தொடர்பான பரிசோதித்த அகழ்வுப் பணிகள் நிறைவுக்கு வந்துள்ளன. இதுவரை 19 மனிதச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மீட்கப்பட்ட மனிதச் சிதிலங்கள் நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்படும்.

குறித்த பகுதி குற்றம் நிகழ்ந்த பிரதேசமான மனிதப் புதைகுழியாக நீதிமன்றினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் கோரப்பட்ட நிலையில், அதற்கான பாதீடு கையளிக்கப்பட்டுள்ளது.

இரண்டு வார காலத்தின் பின்னர், அதாவது உத்தேசமாக ஜூன் மாதம் 26 ஆம் திகதியளவில் மீண்டும் அகழ்வுப் பணிகள் இடம்பெற வாய்ப்புள்ளது. ஆனால், இந்தப் பணிகள் நிதி கிடைப்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும் - என்றார். (அ-ம-26)

## சந்தேகமான...

அரியாலை செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் அவதானிக்கப்பட்ட மனிதப் புதைகுழி மீதான இரண்டாம் கட்ட அகழ்வுகளின் இறுதிநாள் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, துறைசார் பேராசிரியர் சோமதேவ முன்னதாகச் சந்தேகம் வெளியிட்ட பகுதிகளில் ட்ரோன்மூலம் ஆய்வுகளும், ஒளிப்படப் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த ஒளிப்படங்கள் பேராசிரியர் சோமதேவவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், அவையும், அவை தொடர்பான அறிக்கையும் விரிவான ஆய்வின் பின்னர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் போது 19 மனிதச் சிதிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் பணிகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்துள்ளன. நீதவான் அ.அ.ஆனந்தராஜா அகழ்வுப் பணிகளைக் கண்காணித்து வருகின்றார். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி நிறஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர் ஆகியோரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## சட்டவிரோத...

கப்பட்டுள்ளது. ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் தங்களின் சொத்துகள் தொடர்பான விடயத்தைப் பகிரங்கப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யத் தவறுவோருக்கு முதல் இரண்டு வாரங்களில் எச்சரிக்கைக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படும், பின்னர் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல்களின் அடிப்படையில், ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டவிரோதமாகச் சேர்த்த சொத்துக்களை வைத்திருந்தால், அவற்றை அரசுடமையாக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், தண்டம் அறவிடவும், சிறைத்தண்டனை விதிக்கவும் சட்டத்தில் இடமுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விற்பனைக்கு
SUZUKI WEGAN-R FX2017
1ST OWNER கார் விற்பனைக்கு
தொடர்பு: 077 179 2577

கடைகள் வாடகைக்கு
இடம்: சாவகச்சேரி சந்தைக்கு அருகாமையில் 40 அடி நீளம் 30 அடி அகலம் கொண்ட 2 கடைகள் குளியலறை மற்றும் தங்குமிட வசதிகள், வாகனத்தரிப்பிட வசதிகள் உண்டு.
தொடர்புகளுக்கு:
075 641 9450

காணி விற்பனைக்கு உண்டு
உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோயில் வீதியில் 3 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 794 8012

ஆண் வேலையாட்கள் தேவை
யாழ் நகரில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு 18 - 50 வயதுடைய ஆண் வேலையாட்கள் தேவை தங்குமிடவசதி செய்து தரப்படும் மாதச்சம்பளம் - 50000/- (அடிப்படைச் சம்பளம்)
தொடர்பு: 077 937 0000
075 988 1000

வேலைக்கு ஆள் தேவை
உணவகம் ஒன்றிற்கு றொட்டி தயாரிப்பாளர் தேவை
தங்குமிடம் உண்டு மது, புகைத்தல் இல்லாதவர் விரும்பத்தக்கது.
077 967 6403, 074 001 5060

வேலையாட்கள் தேவை
யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஆண், பெண் பில் கிளார்க் தேவை. கணனி அறிவு விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 244 9834 / 077 730 4013

வேலையாட்கள் தேவை
எங்களது நிர்மாண நிறுவனத்திற்குத் கீழ்காணும் பணியாளர்கள் அவசரமாகத் தேவை
1. அளவீட்டியலாளர் (Quantity Surveyor)
- AutoCAD அனுபவம் இருந்தால் சிறந்தது.
2. மேசன் (Mason)
3. உதவியாளர் (Labour)
தொடர்புக்கு: 076 760 0403, 077 966 9498

பணி வாய்ப்பு

முன்னணி ஊடகத்தில் பின்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- பக்க வடிவமைப்பாளர்கள்
- கட்டுரை/பத்தி எழுத்தாளர்கள்
- அலுவலகச் செய்தியாளர்கள்
- பிராந்தியச் செய்தியாளர்கள்

முழுநேர, பகுதி நேர பணி வாய்ப்புக்கள்
திறமையும், ஆர்வமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்
சுயவிவரக்கோவையை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி
chiefeditor@uthayan.com

# பேரினவாத ஆக்கிரமிப்புகளை அரசு உடன் நிறுத்தவேண்டும்

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஜூன் 8**

**தமிழர் தேசத்தில் ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்துவரும் சிங்கள - பௌத்த பேரினவாத அரசின் திட்டமிடப்பட்ட தொல்லியல் ரீதியான ஆக்கிரமிப்புகளை உடன் நிறுத்தவேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நல்லிணக்கம் மற்றும் மாற்றமெனும் போர்வையில் நிலைகொண்டுள்ள சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் போலியான முகத்திரைகள் வடக்கு - கிழக்கில் தொல்லியல் ரீதியான ஆக்கிரமிப்புகளாலும் தமிழ்த்தேசிய இனத்தின் மீதான திட்டமிடப்பட்ட கைதுகளாலும் அம்பலப் படுத்தப்பட்டுவருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலைப்பிரதேசத்தில் அமைந்திருக்கக் கூடிய விவசாய நிலங்களில் நூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்மக்கள் தன்னிறைவுப் பொருளாதாரமான விவசாயத்தை மேற்கொண்டுவருகின்றனர்.

தொல்பொருள் பிரதேசத்துக்குள் அத்துமீறி நுழைந்ததாகப் பொய்யான ஒரு முறைப்பாடு செய்யப்பட்டு இவர்கள் கைது செய்யப்பட்டனர். அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள முருகன் ஆல யத்தின் தீர்த்தக்கரைக்கு அருகிலே திடீரென்று புத்தர் சிலை ஒன்றும் பௌத்த கொடி ஒன்றும் வைக்கப்பட்டுள்ளன.

எனவே இவ்வாறு தொடர்ச்சியாகத் தமிழ்த்தேசத்தின் இருப்புகளின் மீது மேற்கொள்ளப்படும் பண்பாட்டு இனப் படுகொலையை ஸ்ரீலங்கா அரசு உடன்நிறுத்தவேண்டும் - என்றுள்ளது. (ச-25,125)

# சைவப்புலவர் தேர்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 8

சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர் தேர்வுகள் எதிர்வரும் 13, 14, 15 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் வழமையான பரீட்சை நிலையத்தில் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை உரைநடையும், 14 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் 12 மணி வரை இலக்கியமும் பிற்பகல் 1 மணி முதல் 4 மணி வரை இலக்கணமும், 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் 12 மணிவரை சாத்திரமும் பிற்பகல் 1 மணி முதல் 4 மணி வரை வரலாறு பரீட்சைகளும் இடம்பெறவுள்ளன.

அனுமதி அட்டைகள் தபால்மூலம் அனுப்பப்பட்டுள்ளன என்றும் அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் 10 ஆம் திகதிக்கு முன்பு தலைவர் 0777197067, தேர்வுச் செயலாளர் 0776132176, உப தேர்வுச் செயலாளர் 0771350850 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-22,159)

# மு.சிவசிதம்பரத்தின் நினைவுதின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 8



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் பிரதி சபாநாயகருமான மு.சிவசிதம்பரத்தின் 23 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தினரின் ஏற்பாட்டில் நெல்லியடி பேருந்து நிலையத்துக்கு முன்பாக உள்ள அவரது திருவுருவச் சிலையடியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-25,100)

# பட்டத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 8

நல்லூர் சங்கிலியன்மன்றத்தின் 80ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பட்டத் திருவிழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு செம்மணி வயல் வெளியில் நடைபெறவுள்ளது. (ச-25)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

புங்குடுதீவு மேற்கு 4 ஆம் வட்டாரம், பிட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் திருக்கோவில் மஹோற்சவத் திருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

ஜூலை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், 2 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுமென ஆலய பரிபால சபையினர் அறிவித்துள்ளனர். (ச-25)

# விசாகப் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 8

புலோலி திருவருள்மிகு மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த விசாகப் பொங்கல் விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. இந்தப் பொங்கல் விழாவை முன்னிட்டு கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை விரதம் ஆரம்பமாகியுள்ள நிலையில் நாளை திங்கட்கிழமை இரவு சிலம்புகூறல் படலமும் விளக்கெரிப்பும் இடம்பெறவுள்ளன.

செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணியளவில் வளந்துகட்டுதல் இடம்பெற்று நண்பகல் 12 மணிக்கு விசாகப் பொங்கல் விசேட பூசை இடம்பெறவுள்ளது. (ச-33-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

ஆஸ்பத்திரி வீதி, சுப்பிரமணியம் வீதியில் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **076 413 4766**

## வேலையாட்கள் தேவை

யாழ் பிறவுண் வீதியில் (Brown Road) அமைந்துள்ள மரக்காளையொன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- **அனுபவமுள்ள தச்சு வேலையாட்கள்**
- **அரிவு உதவியாளர் (டிஜிற்றல்)**
- **கூலியாட்கள்**

(நிரந்தரமான வேலைவாய்ப்பு)
தங்குமிட வசதி உண்டு
மேலதிக நேர வேலைக்கான ஊதியம் வழங்கப்படும்

(CS 58603) E-1

தொடர்பு: **077 367 7099**

## பெண் தையல்காரர் மற்றும் ஆரி வேலை தெரிந்தவர்கள் தேவை

பெண் ஆடைகள் தயாரிக்கும் தொழில் முயற்சிக்கு அளிக்கப்பட்ட நேரத்திற்குள் துல்லியமாக வேலை முடிக்கக்கூடிய அனுபவமுள்ளவர் தேவை.

**இடம்: நல்லூர், யாழ்ப்பாணம்**

தொடர்பு:- **075 440 5362**

## வேலையாட்கள் தேவை

தென்மாகணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.
சம்பளம்: 60 000

தொடர்பு: **077 480 3379**

## பெண் வேலையாட்கள் தேவை

ARUN WINGS Travels & Tours PVT,LTD
நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை

- Office Admin
- Air Ticketing Executive

(EPF,ETF)

T.P **0768472458**

## வீடும் காணியும் விற்பனைக்கு

**நாச்சிமார் கோவில் வீதியில்**
**1 1/2 பரப்பு**
**காணியும், வீடும்**
**விற்பனைக்கு உண்டு.**

(CS/58482) J-1

**076 824 5652**

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ் பரமேஸ்வரா சந்தியில் புதிய வீட்டில் 2ம் மாடி 4 அறைகள் + AC சகல நவீன வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. வைத்தியர்கள் / விரிவுரையாளர்கள் விரும்பத்தக்கது. தரகர் தொடர்பு கொள்ள வேண்டாம்.

(CS 58483) E-1

தொடர்பு: **077 974 1382**

## பணிப்பெண் தேவை

கச்சேரியில் அமைந்துள்ள நான்கு பேர் தங்கியுள்ள குடும்பம் ஒன்றிற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை

தொடர்புகளுக்கு: **077 804 6794**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பொதிகள் சேவை நிலையத்திற்கு யாழ்நகரிற்கு அருகில் வசிக்கும் கணனி அறிவுடைய ஆண் ஒருவர் தேவை.
வயது 18 - 28

**076 690 8977, 076 690 8978**

## பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் சிறிய Guest house இற்கு தங்கிநின்று வேலை செய்யக் கூடிய ஆண் பராமரிப்பாளர் தேவை

(CS 58496) E-1

**077 370 4298**

## காணி விற்பனைக்குண்டு

நல்லூரில் 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: **077 723 8378**

## பணிப்பெண் தேவை

யாழ் நகர் நல்லூரில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு பணிப்பெண் தேவை

தொடர்பு: **076 849 5827**

## யாழில் பிரத்தியேக வகுப்புகள்

**கணிதம் - தரம் 9, 10, 11**
**ஆங்கிலம் - அனைவருக்கும்**

தொடர்பு: **077 673 6064**

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 300 M தூரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு குறிகியகாலத்திற்கு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: **071 443 2989**

## காணி விற்பனைக்கு

கச்சேரி East இல் 2 பரப்புக் காணி 4 பக்க சுற்று மதில், பொளி கல்லுக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
நல்ல அயல் சூழலுடன் அமைந்த அனைத்து வசதிகளையும் இலகுவாக பெறக்கூடிய இடம்.

**077 358 2704**

## காணி விற்பனைக்கு

வசாவிளான் கிழக்கில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
வசாவிளானில் 67 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தோட்டம் செய்ய பண்ணை அமைக்க சிறந்த காணி.

(CS 58514) E-1

தொடர்புகளுக்கு:
**077 262 7581**
**077 387 0140**

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள Uber நிறுவனத்தில் பணியாற்ற
Marketing Executive-05
Office Assistant-01
உடன் விண்ணப்பிக்கவும்
uberjaffna@gmail.com or Call

தொடர்பு: **070 755 5755**

## Spoken English & Grammar Classes

பல வருட அனுபவ ஆசிரியர்
**K.Ganesh B.A Pera**
Grade 7 to GCE OL, AL,
பட்டதாரிகள்
International School Students
அன்னசத்திர வீதி யாழ்ப்பாணம்

**077 766 8725**




## காணி வீடு விற்பனைக்குண்டு

யாழ் அளவெட்டி பெரிய சங்கத்தானை சந்தியில் இருந்து 100m தூரத்திலும் A.M.A கல்வி நிலையத்தில் இருந்து 50m தூரத்திலும் நல்ல நீர்க்கிணறு, வருமானங்களும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. குடியிருப்புச் சூழல்.
காணியின் பரப்பு - 5 பரப்பு

(CS 3343) J-1

தொடர்பு: **076 755 8606**
**076 798 1092**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111   விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

மன்றம் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் – பின்றை
ஒலித்தலும் உண்டாமென்று உய்ந்துபோம் ஆறே
வலிக்குமாம் மாண்டார் மனம்.

– நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 வைகாசி 25 ஞாயிற்றுக்கிழமை (08.06.2025) சிகரம் :148

# புதிய கூட்டுகள் புனிதமானவையா?

○ நிலாந்தன்

கட்சி மைய அரசியலில் உலகம் முழுவதுமே புனிதமான கூட்டு என்று எதுவும் கிடையாது. இருப்பதில் பரவாயில்லை என்று கூறத்தக்க பொருத்தமான கூட்டுகள்தான் உள்ளன. இப்பொழுது கஜேந்திரகுமார் உருவாக்கி வைத்திருக்கும் கூட்டும் அப்படித்தான். அதுவும் ஒரு சமயோசிதக் கூட்டுத்தான். தந்திரோபாயக் கூட்டுத்தான். எனினும், தமிழ்த் தேசிய நோக்கு நிலையில், பொது எதிரிக்கு எதிராக ஆகக்கூடியபட்சம் ஒரு தேசமாகத் திரள்வது என்ற அடிப்படையில் அந்தக் கூட்டுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு.

தமிழ் மக்கள் ஓர் ஆயுதப் போராட்டத்தை கடந்து வந்த மக்கள். அதேசமயம் ஆயுதப் போராட்டத்துக்குப் பின்னரும் நீதிக்காகப் போராடிக்கொண்டிருக்கும் மக்கள். எனவே நீதிக்கான போராட்டத்தில் யாரைப் பிரதான குற்றவாளியாகக் காணப் போகிறோம்; யாருக்கு எதிராக அணிதிரளப் போகிறோம் என்பதில் தமிழ் மக்களிடம் மிகத் தெளிவான சிந்தனை இருக்கவேண்டும். அதாவது பொது எதிரிக்கு எதிராக ஒன்று திரள்வது. எங்களுக்குள் ஒருவர் மற்றவரை குற்றஞ்சாட்டி நாங்கள் பல துண்டுகளாகச் சிதறிப்போவதா? அல்லது பொது எதிரிக்கு எதிராக ஒன்றுதிரள்வதா? என்ற கேள்விக்கு இங்கு விடை முக்கியம்.

இந்த அடிப்படையில் பார்த்தால் கஜேந்திரகுமார் 'டி.ரி.என்.ஏ'யோடு கூட்டுக்குப் போவது என்று முடிவெடுத்தது ஒரு திருப்பகரமான மாற்றம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தியாகி - துரோகி வாய்ப்பாட்டுக்கு வெளியே அந்தக் கூட்டு உருவாகியிருக்கிறது. அப்படிப் பார்த்தால் கடந்த 15 ஆண்டுகால வாய்ப்பாட்டுக்கு வெளியே முன்னணி வந்திருக்கிறது. அது இரண்டு தரப்புக்கும் மெய்யான ஒரு பண்புருமாற்றமாக இருந்தால் கூட்டு நிலைக்கும்.

அந்தக் கூட்டின்மூலம் அவர்கள் பின்வரும் நன்மைகளை அடைய முயற்சிக்கலாம். முதலாவதாக, பொது எதிரிக்கு எதிராக ஒப்பீட்டளவில் பெரிய கூட்டு. இரண்டாவதாக, உள்ளூராட்சிசபைகளை நிர்வகிப்பதற்கான அதிகரித்த வாய்ப்புகளை உருவாக்கலாம். மூன்றாவதாக, தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியைத் தனிமைப்படுத்தலாம். நான்காவதாக, மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஒரு பலமான முன்னணியை உருவாக்கலாம். ஐந்தாவதாக, கஜேந்திரகுமாரின் தலைமைத்துவத்தைப் பலப்படுத்தலாம்.

'டி.ரி.என்.ஏ.'யைப் பொறுத்தவரை அவர்கள் யாரோடாவது கூட்டுச்சேரவேண்டும். தனியாகநின்றுபிடிக்கமுடியாது. தமிழரசுக் கட்சியோடு கூட்டுச்சேர்ந்தால் மாகாணசபையிலும் அதற்குப் பின் வரக்கூடிய தேர்தல்களிலும் அதிகரித்த வெற்றி வாய்ப்புகள் அவர்களுக்கு இருக்கக்கூடும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அவ்வாறான வெற்றிவாய்ப்புகளை இனிமேல்தான் நிரூபிக்க வேண்டும். ஆனால் உள்ளூராட்சி சபைகளை நிர்வகிப்பது தொடர்பாக தமிழரசுக் கட்சியோடு அவர்கள் முன்னெடுத்த பேச்சுவார்த்தைகளில் திருப்தியான பெறுபேறுகள் இல்லாத ஒரு பின்னணிக்குள் அவர்கள் முன்னணியை நோக்கி வந்திருக்கிறார்கள். தமிழரசுக் கட்சி தன்னை முதன்மைக் கட்சியாகவும் பெரிய கட்சியாகவும் கருதி, தனது மேலாண்மையை வலியுறுத்த முற்பட்டதன் விளைவு இது.

புதிய கூட்டை எப்படி உளவியல் ரீதியாகவும் நடைமுறையிலும் பலவீனப்படுத்தலாம் என்று சிந்தித்து சுமந்திரன் அணி திட்டமிட்டு வேலை செய்கின்றது. சுமந்திரன் அணி இந்தக் கூட்டைக் கண்டு பதற்றமடைகிறது. எதிர்காலத்தில் தலைமைத்துவம் முன்னணியிடம் சென்றுவிடக்கூடாது என்ற பயமும் அதில் உண்டு. எனவே இந்தக் கூட்டை உடைப்பதற்காக எந்த ஒரு வெளி எதிரியையும்விடக் கூடுதலாக சுமந்திரன் அணி வேலை செய்கின்றது. ஈ.பி.டி.பி.யுடன் தமிழரசுக் கட்சி பேச்சுவார்த்தைக்கு போனதும் இந்த அடிப்படையில்தான். ஆனால் அதனால் ஏற்படும் பின்னுதைப்பால் கட்சியைக் கடுமையாக பாதிக்கக்கூடிய நிலைமைகள் தெரிகின்றன.





இதில் சுமந்திரனுக்கு ஆறுதலான விடயம் என்னவென்றால், சிறீதரன் சுமந்திரனுக்கு எதிராக கட்சிக்குள் காணப்படும் சக்திகளுக்கு தலைமைதாங்க இந்தக்கட்டுரை எழுதப்படும் நாள் வரை தயாரில்லை என்பதுதான். இதனால் சுமந்திரன் மக்களால் நிராகரிக்கப்பட்ட பின்னரும் படிப்படியாக கட்சிக்குள் தன் பிடியை பலப்படுத்திவருகிறார். மந்திரித்து ஏவிவிடப்பட்ட சேவலைப்போல அவர் அங்கலாய்ப்போடு ஓடிக்கொண்டேயிருக்கிறார். ஒரு கட்சியின் பதில் செயலாளர் இவ்வளவுக்குத் தீயாக வேலை செய்வதில்லை. ஆனால் சுமந்திரன் தொடர்ந்து இயங்குகிறார். முன்பு நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் பொழுது கட்சியின் எல்லாமுமாக அவர் தோன்றினார். இப்பொழுதும் அந்தப் பாத்திரத்தை எப்படித் தக்கவைப்பது என்று சிந்தித்துத் திட்டமிட்டு உழைக்கிறார். அடுத்து வரக்கூடிய தேர்தல்களில் எப்படியும் மக்கள் ஆணையைப் பெற்றுவிடவேண்டும் என்ற தவிப்பு அதில் தெரிகிறது.


தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் தலைமைப் போட்டி என்பது பலமான தலைமைகள் இரண்டு இருப்பதால் ஏற்பட்டது அல்ல. இரண்டுமே பலவீனமான தலைமைகள் என்பதால் ஏற்பட்டதுதான் என்பதைக் கடந்த ஆண்டு நிரூபித்துவிட்டது. இப்படிப்பட்டதோர் பின்னணிக்குள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது கஜேந்திரகுமாரின் தலைமைத்துவத்தை பலப்படுத்த இதுதான் தருணம் என்று நம்புவதாகத் தெரிகிறது. கடந்த வெள்ளிக்கிழமை கஜேந்திரகுமார் கொழும்பில் நடத்திய ஊடகச் சந்திப்பில் தெரிவித்த கருத்துகள் சுமந்திரன் அணிக்குப் பொறிவைப்பவை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது கடந்த 15 ஆண்டுகளாக தன்னை ஒரு மாற்று அணியாகத்தான் ஸ்தாபித்துவந்திருக்கிறது. தன்னை ஒரு பிரதான நீரோட்டக் கட்சியாகக் கருதி வடக்கு கிழக்கு தழுவிய ஒரு பெருங்கட்சியாக தன்னை கட்டமைத்துக்கொள்ள அந்தக்கட்சி தவறிவிட்டது. 15 ஆண்டுகளின் பின் கஜேந்திரகுமார் உடல் ரீதியாகவும் நோய்வாய்ப்பட்டு தேறியபின், அந்தக் கட்சி அவருக்கு நெருக்கமான சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களின் தூண்டுதலால் தனது வழமையான வாய்ப்பாட்டிலிருந்து இறங்கி வருவதாகத் தெரிகிறது. ஆனால் வடக்கு கிழக்கு தழுவிய ஒரு பெருங்கட்சியாக அவர்கள் வளர்வதற்கு இதைவிடக் கடுமையாக உழைக்கவேண்டும். அதாவது தமிழரசுக் கட்சிக்கு மாற்றீடாக வளர மேலும் கடுமையாக உழைக்கவேண்டும். அவர்கள் அப்படி உழைக்கும் வரையிலும் தமிழரசுக் கட்சிதான் முதன்மைக் கட்சியாக தொடர்ந்துமிருக்கும். புதிய கூட்டு நிலைத்திருக்குமாக இருந்தால் தமிழ்த் தேசிய அரசியலில் இரு கட்சிப் பண்பு மீண்டும் தலைதூக்கும்.

தமிழ்த் தேசிய அரசியலில் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் ஏற்பட்ட கூட்டுகளைத் தொகுத்துப்பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய கட்சிகளும் சரி ஆயுதப் போராட்ட இயக்கங்களும் சரி தங்களுக்குள்ளேயும் மோதியிருக்கின்றன. தங்களுக்கு இடையிலும் மோதியிருக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து தொடங்கி ஆயுதப் போராட்ட காலத்தில் திம்பு பேச்சுவார்த்தையை நோக்கி உருவாக்கப்பட்ட இயங்கங்களின் கூட்டு. அதன்பின் உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அதன்பின் உருவாக்கிய தமிழ் மக்கள் பேரவை. அதன்பின் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு வரையிலுமான எல்லாக் கூட்டுகளும் ஒரு கட்டத்தின் பின் குலைந்துவிட்டன. கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலான தொகுக்கப்பட்ட தோல்வியென்பது கூட்டுகளின் தோல்வியுந்தான்.

இப்பொழுது ஒரு கூட்டு உருவாகியிருக்கிறது. எனினும் இதுகூட பிரமாண்டமான ஒரு கூட்டு இல்லை. தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் வடக்கு கிழக்கு தழுவிய பெருங்கட்சியாக, முதன்மைக் கட்சியாகக் காணப்படுகின்றது. எனவே இப்பொழுது ஏற்பட்டிருக்கும் புதிய அரசியல் ரத்தச் சுற்றோட்டங்கள் தமிழ்த் தேசிய அரசியலில் இரு கட்சி நிலையை பலப்படுத்துமா? மேற்கத்திய ஜனநாயகங்களில் உள்ளது போல இரு கட்சிப் போட்டி நிலைமை என்பது அங்கு ஆரோக்கியமானது. ஆனால் நீதிக்காக போராடும், அரசற்ற மக்களாகிய தமிழ் மக்களைப் பொறுத்தவரை கடந்த 16 ஆண்டு காலத் தேக்கம், தோல்வி என்பவற்றின் பின்னணியில், அது ஆரோக்கியமானது அல்ல. பொது எதிரிக்கு எதிராகத் தேசம் திரண்டு நிற்காது. இரண்டாக நிற்கும். கட்சி மைய அரசியல் இப்படித்தான் இருக்கும். கட்சிகளால் மட்டும் தேசத்தைக் கட்டியெழுப்பமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனம் மகா சனங்களுக்கு...!

## முதற்கண்ணீர் வணக்கம்,

'லங்கா புரியில் தமிழனாய்ப் பிறந்ததுக்கு மாதவம் செய்திருக்க வேணும்' எண்டு ஆரோ சொன்னது ஞாபகத்துக்கு வருகிது. சீலை அரையிலை இல்லை. தடவிப் பாத்தால் முதுகெலும்பைக் காணேல்லை. முறிவு நெறிவு வைத்தியரிட்டைக் காட்டினால் அது கரைஞ்சு போச்சுது எண்டு சொல்லுறார். ரோச நரம்பு அறுந்துபோய்க்கிடக்காம். அதை ஒட்டேலாதாம். 'வல்கனைஸ் பண்ணேலாதோ ?' எண்டு கேட்டதுக்குப் பாப்பம் எண்டு சைக்கிள் கடைக்காரர் சொல்லுறார்.

'ஏறாப்படலை ஏறி என்ன?
எட்டப்பர் தம்மோடு கூடி என்ன,
உமக்கென்று, மாடாயடித்து
மறியலும்தான் போனார்,
வீடே கதியானார் தினம்
விம்முகிறார் வெட்கி..!'




நான் முகநூலிலை பார்த்தது. இது ஒரு விடுகதை இல்லை. இது ஒரு தொடர் கதை. வெட்கி விம்முறவர் ஆர்.....?

துரோகி, எட்டப்பன், காட்டிக் குடுத்தவன், கோடரிக்காம்பு, தன்ரை இனத்தவனைத் தானே அழிச்சவன் எண்டு இப்பிடி வசைபாடிப்போட்டு எந்த முகத்தோடை தியேட்டரடிக்குப் போனனியள்? எண்டு உங்கடை தலைமையை நாலு வசனம் நாக்குப் பிடுங்கிறமாதிரி நீங்கள் கேட்க வேண்டாமோ? பிடிச்சுவைச்ச சிலையைப் போலை 'கம்' மெண்டெல்லோ இருக்கிறியள். போன உள்ளூராட்சி சபையிலை நீங்கள் குடுத்த குளுக்கோஸாலைதான வந்த வினை. பார்லிமெண்ட் எலச்சனிலை செய்ததைப் போலை செய்திருக்கவேணும். அப்பிடியே உந்தக் கட்சியை மெலிஞ்சு பட்டினியில சாகவிட்டிருக்கவேணும். சொந்தம் எண்டு பாத்தியள் சோடை போட்டியள்.

அவன்ஆரோ சொன்ன மாதிரி அநுர கொம்பனிக்கே வோட்டுப் போட்டிருக்கலாம். போட்டிருந்தால் இந்தச் சீத்துவக்கேட்டை எல்லாம் கண்ணாலை பாத்திருக்கத் தேவை இல்லை. தெரியுதே? பத்தோடை பதினைஞ்சாப் போயிருக்கும். ஒரு அயோக்கியனிட்டை சரணடையிறதைக் காட்டிலும் எதிரியிட்டைச் சரணடையலாம் எண்டு அப்பு எனக்குச் சொல்லுறவர். எங்களுக்கு வெக்கம், மானம், ரோசம் இல்லை எண்டு அப்பு அடிக்கடி சொல்லி என்னைத் திட்டிறவர். அப்ப நான் நினைச்சன் அவர் என்னைப் பாத்துத்தான் அப்பிடித் திட்டிறவர் எண்டு. ஆனால் இப்பதான் தெரியிது அவர் உங்களைப் பாத்துத்தான் திட்டினவர் எண்டு.


தியேட்டர் படியேறினதும் பத்தாமல் தாடியரின்ர செத்தைக்குள்ளை போய் மடியைப் பிடிச்சுக் கெஞ்சாத குறையா ஏன் பிச்சைகேக்கிற மாதிரி ஆதரவு கேக்கவேணும் எண்டு சனம் உங்களைப் பரிகாசப்படுத்தினம். தியேட்டருக்குப் போறம் போய்க் கதைக்கப் போறம் எண்டு தனக்குச் சொல்லேலை எண்டு இன்னொருத்தர் ஒப்பாரி வைக்கிறார். கேட்டிருந்தால் தான் போகவிட்டிருக்கமாட்டன் எண்டு இன்னுமொருத்தர் வீராப்பு கதைக்கிறார். நாக்குக்கு நரம்பில்லை எண்டு எல்லாருக்கும் தெரியும். ஆனால் உப்பிடிக் கதையைப் பிரட்டத்தான் கடவுள் நரம்பில்லாமல் நாக்கைப் படைச்சவர் எண்டு இப்பதான் தெரியுது.

முந்தி என்னத்தைச் சொல்லித் தாடியரைத் திட்டினியளோ, என்னென்னத்தைச் சொல்லி வசைபாடினியளோ அதே வாயாலை அந்தாளின்ரை புகழ் பாடுறதைக் கேக்க அருவெருப்பாக் கிடக்கு. அதைக் கேட்டு அவர் புழுவா நெளியிற நெளிவைப் பாக்க ஆயிரம் கோடி கண் வேணும் எண்டு இப்ப பாரதியார் உயிரோடை இருந்தால் பாடி இருப்பார்.

என்ர அப்பாவித் தமிழ்ச் சனங்களே, தயவு செய்து நாடகத்தை நாடகமாப் பாருங்கோ. படத்தைப் படமாப் பாருங்கோ. சீரியலை சீரியலாகப் பாருங்கோ. அதைச் சீரியஸாகப் பாராதையுங்கோ. அதை உண்மை எண்டு நம்பாதையுங்கோ. போன உள்ளூராட்சித் தேர்தலிலை உங்கடை உறவுகள், தெரிஞ்ச சனம் எண்டு வாக்களிச்சியள். அது இப்ப எந்த அளவுக்கு ஒரு துரோகத்துக்குக் கொண்டுபோய்விட்டிருக்கு எண்டு பாத்தியளே?

என்ரை புழுக்கத்தை ஆருக்குச் சொல்லுறது? மனசுக்கை செத்துச் சாவட்டையா இருக்கிறதை நான் ஆருக்குச் சொல்லி அழ?

உங்கள்மேல் பிரியமுள்ள
**அப்பாவி அன்னமுத்து**



# 18 வருடக் கனவும் ஏழரைச் சனியும்

○ ஆர்.பிரகாஷ்

ஐ.பி.எல். தொடரில் 18 ஆண்டுகளுக்குப் பின்னர் கிண்ணத்தைக் கைப்பற்றிய பெங்களூர் அணியின் வெற்றிக் கொண்டாட்டங்கள் பெரும் சோகத்தில் முடிந்திருக்கின்றன. இனியொரு வெற்றிக் கொண்டாட்டம் வேண்டாம் எனும் அளவுக்கு, 11 பேரைப் பலியெடுத்திருக்கின்றது பெங்களூர் அணியின் வெற்றிவிழா ஏற்படுத்திய கூட்ட நெரிசல். இந்த உயிரிழப்புக்களுக்கு இந்தியப் பிரதமர் மோடிமுதல் பல தரப்பினரும் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளனர். அதேநேரம், நீதிமன்றங்களின் கண்டனத்தையும், கேள்விக் கணைகளையும் கர்நாடக அரசும், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் பெருவாரியாக எதிர்கொண்டுள்ளன.

சென்னை, மும்பை அணிகளின் திறந்தவெளி வெற்றிக் கொண்டாட்டங்களும் இதுபோன்று முன்னெடுக்கப்படுவது வழமையாகும். ஆனால், அப்போதெல்லாம் இத்தகைய அச்சுறுத்தல்களும் அசம்பாவிதங்களும் நேர்வதில்லை. அப்படியாயின் பெங்களூர் அணியின் வெற்றிக் கொண்டாட்டம் மட்டும் ஏன் இவ்வாறு வினையாகியது? இதற்கெல்லாம் பெங்களூர் அணி நிர்வாகம்தான் காரணம் என்று கைகாட்டியிருக்கின்றது கர்நாடக பொலிஸ் திணைக்களம்.

சென்னை அணி, மும்பை அணிகளின் வீதிப் பவனிகளின்போது, வீதியில் குறிப்பிடத்தக்க இடவசதி உள்ளதா என்பது பலமுறை உறுதிப்படுத்தப்படும். ஆனால், அந்தப் பரிசீலனையில் பெங்களூர் அணி நிர்வாகம் ஈடுபடவில்லை. '80 ஆயிரம் ரசிகர்களை மட்டுமே உச்ச அளவில் கொள்ளக்கூடிய இடத்தில் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட ரசிகர்கள் குவிவார்கள்' என்று தாம் வழங்கிய எச்சரிக்கையைக் காற்றில் பறக்கவிட்டு, வெற்றிவிழாக் கொண்டாட்டங்களை எண்ணம்போல் நடத்த பெங்களூர் அணி முரண்டுபிடித்தது என்கின்றது கர்நாடக பொலிஸ் திணைக்களம். இதன் விளைவாகவே, பெங்களூர் அணி நிர்வாகத்தைச் சேர்ந்த நால்வர் இந்த விடயத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுபோதாதென்று பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிமீது குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா பத்து லட்சம் ரூபா வழங்க பெங்களூர் அணி நிர்வாகம் முன்வந்தபோதிலும், இதற்கு அந்த அணி செலுத்தப்போகும் விலை பெரியதாக இருக்கும் என்று இந்திய சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதற்கிடையே பெங்களூர் அணியைத் தண்டிக்கவேண்டும் என்றும், விராட் கோலியும் இதற்குப் பொறுப்பேற்கவேண்டும் என்றும் பொதுநல வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.



18 வருடத் தவத்தின் பின்னர், ஆர்ப்பரித்து வாரக்கணக்கில் கொண்டாடப்பட வேண்டிய வெற்றியொன்று பெங்களூர் அணியை அரவணைத்த போதிலும், அந்த அணிக்கு இயல்பாகவே இருந்துவரும் ஏழரை வெற்றிக் கொண்டாட்டத்திலும் கைவரிசை காட்டியிருக்கின்றது. ஐ.பி.எல். தொடரில் ஒரு கறுப்புப் பக்கமாக இந்தச் சம்பவங்கள் பதிவாகும் என்பது மறுக்க முடியாத உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.நிக்ஸன்

# புதிய அரசியல் யாப்புக்காக எம்.பி. ஆகிறாரா சுமந்திரன்?



அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு ஒன்றைத் தயாரிக்கவுள்ளது. இதற்குரிய ஏற்பாடுகள் மும்முரமாக இடம்பெறுகின்றன. யாப்புத் தயாரிப்பின்போது இனப்பிரச்சினைத் தீர்வுக்குரிய ஏற்பாடுகளும் இருப்பதாக அரசாங்கத் தகவல்கள் கூறுகின்றன.

1996 ஆம் ஆண்டு சந்திரிகா அரசாங்கம் தயாரித்த நகல் வரைவுகள் மற்றும் 2015 இல் மைத்திரி ரணில் அரசாங்கம் தயாரித்த வரைவுகள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டே இந்தப் புதிய அரசியல் யாப்புக்கான நகல் தயாரிக்கப்படவுள்ளது.

தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவான சட்டத்தரணிகள் குழு புதிய யாப்புக்கான ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. அநேகமாக இந்த ஆண்டு இறுதியில் பணிகள் அதிகாரபூர்வமாக ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி பிரதமர் தலைமையிலான ஆட்சி முறையை உருவாக்க வேண்டும் என்ற யோசனைகளும் இந்த யாப்பில் உண்டு. இந்தப் பின்புலத்தில் புதிய யாப்பு தயாரிப்பு விஷயத்தில் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முழு ஒத்துழைப்பு வழங்கவுள்ளார் எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

குறிப்பாக சுமந்திரன் விரைவில் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்பார் எனவும், புதிய அரசியல் யாப்புத் தயாரிப்புக்கு அவர் ஒத்துழைப்பு வழங்குவார் என்று எதிர்பார்ப்பதாகவும், நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

எந்த அடிப்படையில் சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்பார் என்று நீதியமைச்சர் எதுவும் கூறவில்லை. ஆனால் இப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் சத்தியலிங்கம் மிக விரைவில் வெளிநாடு செல்லவுள்ளதால், அவருடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குச் சுமந்திரன் நியமிக்கப்படலாம் என்று தமிழரசுக் கட்சியின் உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

இந்தப் பின்னணியில்தான் உள்ளூராட்சி சபைகளை அமைக்கும் விடயத்தில் கஜேந்திரகுமார் அணியுடன் கூட்டு சேராமல், ஈ.பி.டி.பி.யுடன் கூட்டுச் சேர்வதற்கான காய் நகர்த்தல் நடத்திருக்கிறது போல் தெரிகிறது. அதேநேரம், மஹிந்த ராஜபக்சவின் வேண்டுகோளின் பிரகாரமே ஈ.பி.டி.பி. தமிழரசுக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைக்கவுள்ளதாகவும் நம்பத் தகுந்த வட்டாரங்கள் கூறுகின்றன..

குறிப்பாக தமிழரசுக் கட்சியுடன் இணைந்து ஈ.பி.டி.பி.யை ஆட்சி அமைக்குமாறு வலியுறுத்துமாறு, மஹிந்த ராஜபக்ச ஊடகவியலாளர் ஒருவரிடம் கூறியதாகவும், அவர் வழக்கம் போல அந்தத் தகவலை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தொலைபேசியில் எடுத்துச் சொன்னதாகவும் கொழும்பில் தகவல்கள் கசிந்துள்ளன.

சுமந்திரன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவுடன் ஏற்கனவே நல்ல உறவில் இருக்கும் ஒருவர். அதன் காரண காரியமாகவே டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி., தமிழரசுக் கட்சியுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதை மஹிந்த ராஜபக்ச அரசியல் நோக்கில் விரும்பியிருக்கலாம்.

சிங்கள அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை, அவர்களிடையே கட்சி அரசியல் வேறுபாடுகள் இருந்தாலும், வடக்கு கிழக்கு ஈழத்தமிழர்களைக் கையாளும் விவகாரத்தில் ஒரு புள்ளியில் நின்று செயற்பட்டு வருகின்றனர் என்பது பொதுவான உண்மை. அந்த அடிப்படையில் சுமந்திரன் ஊடான தொடர்புகள் காய்நகர்த்தல்கள் தனிப்பட்ட முறையில் அரசியல் ரீதியாக தமக்கு உதவியாக இருக்கும் என்ற எண்ணம் மஹிந்த ராஜபக்சவுக்கு இல்லாமலில்லை. கட்சி அரசியல் வேறுபாடுகள் இன்றி அரசியல் தலைவர்களுக்குரிய சட்ட உதவிகளை சுமந்திரன் கடந்த காலங்களிலும் மேற்கொண்டிருந்தார் என்ற பின்னணியிலே இந்த நகர்வையும் அவதானிக்க முடிகிறது. எதுவும் மலிந்தால் சந்தைக்கு வரும் தானே?மலியும் வரை காத்திருப்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்புரம் சி. கதிர்காமநாதன்

# சும்மா போய்ப்பாப்பம்!

சஞ்சீவி சிறுகதை



இனி இங்க இருந்து ஒரு பிரயோசனமில்லை, சும்மா இருந்து பணத்துக்கு என்ன வழி என்ன வழி, என்னத்த சம்பாதிக்கிறதெண்டு யோசித்துக் கொண்டு இருக்கவேண்டியதுதான். தொழிலும் ஒண்டும் சீராகவில்லை. ஒரே புழுக்கம், அவியல் வெளியால அதைவிட மனப்புழுக்கம் என்னத்தச் சொல்ல? எல்லாமே சூனியமாகிப் போறதுபோல் இருந்தது. எதை நினைச்சு சந்தோஷப்படுகிறது? காதில் விழுகிற செய்திகள் நல்ல செய்திகளாக இல்லை. எல்லாமே போறாங்கள், போட்டாங்கள் என்ற செய்திகளாத்தான் கிடக்கு

'கனடா போட்டானாம்'

யாரைப் பார்த்துக் கதைத்தாலும் உதுதான் கதையா இருக்குது. போன கிழமை வழியில் நிண்டு கதைச்சவனை அடுத்த கிழமை தேடினால் அவன் வெளிநாடு போட்டானாம் எண்ட நியூஸ்தான் வருகுது. கடை வைச்சிருந்தவன், தோட்டம் செய்தவன், மாடுகள் வளர்த்தவன், குட்டிக் குட்டி வேலை செய்தவன் அட இப்ப படிச்சு முடிச்சு பட்டம் பெற்று அலைஞ்சு கவுன்மேந்து வேலை கிடைச்சவனும் வேலையை விட்டிட்டு அல்லது லீவிலோ குடும்பத்தோட வெளியால போட்டார்கள். தெரிந்த சொந்தக்கார உறவுகளை "எங்கயடா தம்பியைக் கண்ணில காணேல்லை?" எண்டு கேட்டால் எங்களுக்குத் தெரியக்கூடாது என்பதற்காக "அவர் ஒரு அலுவலாய் ஓடித்திரியிறார் " என்று பம்மிக்கொண்டு சொல்லினம். இப்ப ஊரில உதவிட்டால் வேற என்ன அலுவல் கிடக்கு. எல்லாம் எங்களுக்கும் விளங்கும். வெளிநாடு போற ஆசை எனக்கு இருந்ததில்லை, ஊரில இருக்கிறதுதான் எனக்குப் பிடிக்கும். அது ஒரு தனி சுகம். அது அனுபவித்தவர்களுக்கே புரியும்.

எங்கட ஊரைப் பாத்துக்கொண்டு வாறது எவ்வளவு இன்பம். எவ்வளவு விசயங்களை கதைத்து, கேட்டு, அனுபவித்து வரலாம். சந்தைக்குப் போய் கறி சாமன்களை வாங்கிக்கொண்டு வந்து மனுசியோடு சேர்ந்து சமைச்சுச் சாப்பிடுவது எவ்வளவு கொடுப்பனவு, அதுவும் பழைய சினிமாப் பாட்டைக் கேட்டுக்கொண்டு குசினி வேலையைப் பார்ப்பது... தலைக்குள்ள ஒரு துளி தன்னும் வெளிநாட்டு எண்ணம் வந்ததே இல்லை. அண்டைக்கு ஆனந்தர் போனில சொன்ன விடயம் என்னைக் குழப்பிப்போட்டுது.

"சிவாண்ண இந்த மாதக் கடைசியில நாங்கள் மகனிட்ட போறம். நாங்கள் இவ்வளவு நாளும் பிள்ளையள் கேட்க வரமாட்டம் என்று காரணங்கள் சொல்லிக்கொண்டு இருந்தனாங்கள். அதுவும் உந்த மாடி வீட்டைக் கட்டிப்போட்டு சும்மா விட்டிட்டுப் போறதெண்டால் கஸ்ரம்தானே. இப்ப பாத்தால் தெரிஞ்ச சனமெல்லாம் வெளியால போகுது.... சரியண்ணை நீங்களும் யோசியுங்கோ... வைக்கிறன்."

அடக்கடவுளே அண்டைக்கு வழக்கம்பரை மயூரன் கடையில சாமான் வாங்கேக்க தெரிஞ்ச பெடியன்

"அங்கிள் வேலை செய்யிறீங்களோ?" எண்டு கேட்டான்.

"வேலை செய்யிறன்.. தனியார் வேலைதான். பரவாயில்லை,நீர் என்ன செய்யிறீர்?"

"நான் இங்க நல்ல வேலையிலதான் இருக்கிறன்.. இப்ப கனடா போற பிளானோடதான் இருக்கிறன். கட்டாயம் எண்டில்ல சும்மா போய்ப் பாப்பம்... அங்க மனுசியின்ரை ஆக்கள் இருக்கினம். ரிக்கட் பிரச்சினையில்லை. போய்ப் பாப்பம் சரிவராட்டி வருவம்... சரி வாறன்"

அவன் சிம்பிளாய் சொல்லி விட்டுப்போட்டான். இங்க இருந்து எங்களுக்கு என்ன மரியாதை கிடைக்கப்போகுது? வெளிநாட்டுக்காரர்களுக்கு இங்க இருக்கிற ஆக்கள் கொடுக்கும் மரியாதையும் வரவேற்பும் சொல்லி மாளாது.

அவர்களைப் பார்த்துக் கதைத்து சாப்பாடு கொடுத்து அவர்களிடம் உதவிகள் பெற்று பின்சொல்லும் கதைகள் "பாத்தியே வெளியால போனலும் அப்படியே மாறாமல் இருக்கிறான் எப்படிக் கதைக்கிறான்".

யாரைப் பார்த்துக் கதைத்தாலும் உதுதான் கதையா இருக்குது. போன கிழமை வழியில் நிண்டு கதைச்சவனை அடுத்த கிழமை தேடினால் அவன் வெளிநாடு போட்டானாம் எண்ட நியூஸ்தான் வருகுது. கடை வைச்சிருந்தவன், தோட்டம் செய்தவன், மாடுகள் வளர்த்தவன், குட்டிக் குட்டி வேலை செய்தவன் அட இப்ப படிச்சு முடிச்சு பட்டம் பெற்று அலைஞ்சு கவுன்மேந்து வேலை கிடைச்சவனும் வேலையை விட்டிட்டு அல்லது லீவிலோ குடும்பத்தோட வெளியால போட்டார்கள்.

ஊரில் நடக்கும் கலியாண வீடோ, பூசை வீடோ, பிறந்தநாள் கொண்டாட்டமோ, கோயில் திருவிழாக்களோ, நல்லதோ, கெட்டதோ எல்லாவற்றும் வறிய நாட்டுக்குப் பின்னால் நிற்கும் வல்லரசு நாடு போல் வெளிநாட்டுக்காரர்தானே இருக்கினம். எல்லா கொடுக்கல் வாங்கல்களுக்கும் இந்தத் காசு, பணம் , துட்டு, மணியெல்லாம் எங்கிருந்து வருகிறது? இங்கே கட்டப்பட்டிருக்கும் மாடி வீடுகள் அரண்மனைகள் எப்படி முளைத்தன? எல்லாமே வெளிநாட்டு டொலரின் மகத்துவம் வெளிநாட்டிலிருந்து வாற உறவுகளை வெளிநாட்டு வாழ்க்கை பற்றிக் கேட்டால் என்ன சொல்லினம் "அங்க வந்த பிறகுதான் தெரியும். சரியான கஸ்ரம். நாங்கள் முதல் போய் பட்டபாடு எங்களுக்கெல்லோ தெரியும். இப்ப வாறது சரியான முட்டாள்தனம். எங்கட ஆக்களுக்குச் சொன்னால் விளங்காது."

"அரசியல்வாதிகளே சனங்கள் இல்லாத நாட்டை வைத்து அரசியல் செய்ய முடியுமா?"



"அம்மா அப்பாவைப் பாத்தனீங்களே இப்ப கொஞ்ச நாளாய் ஒரு மாதிரியாய் இருக்கிறார். என்ன தனக்குள்ள புலம்பிக்கொண்டு யோசித்துக்கொண்டிருக்கிறார்..என்ன பிரச்சினையாம்....?"

மகன் என் மனைவியிடம் கேட்டான்.

"அவர் வெளிநாட்டுக்கு ஆக்கள் போறதப் பற்றி யோசிக்கிறார்... நாங்களும் போனால் என்னவாம்?"

"அப்பா யோசிக்காதையுங்கோ.நானும் படிப்பை முடிச்சுப்போட்டு என்ன செய்யப்போறனோ?"

குழப்பமான சூழ்நிலை.

வெளியில் ஒலிபெருக்கியில் ஒரு அறிவிப்பு.

"மக்களே நீங்கள் வளர்க்கும் நாய்களுக்கு தடுப்பூசி இன்று போடப்படும். மடத்தடிப் பிள்ளையாருக்கு நாய்களைக் கொண்டுவரவும்" வாகனம் அப்பால் நகர்ந்தது.

"அப்பா . சொன்னது கேட்டதே.போன வருஷம் ஊசி போடேக்க தந்த கார்ட்டையும் கொண்டு போங்கோ"

கட்டியிருந்த நாயினைக் கழற்றி சங்கிலியுடன் தெருவுக்கு வந்தேன்.

ஒரே குரைப்புச் சத்தம்

ஊசி போடுமிடத்தில் நாய்களின் கோஷ்டி கானம்

சனத்தொகையை விட நாய்களின் பெருக்கம் அதிகமாகத் தெரிந்தது.

"ஐயா வாங்கோ...கார்ட்டைத் தாங்கோ. நாயை கவனமாய் பிடிச்சுக் கொள்ளுங்கோ"

சரி ஊசி போட்டாச்சு

"தம்பி ஒரு விசயம்"

"சொல்லுங்கோ"

"வேற தடுப்பூசி இருக்கே?"

"எதுக்கு?"

"வெளிநாட்டுக்குப் போற யோசனை வராமல் தடுக்கிற ஊசி மருந்து இருந்தா கையோட போட்டு விடுவியளே?" நான் பணியாளரைப் பார்த்துக் கேட்டேன். ஊசி போட்ட அல்லேஷன் என்னை முறைத்துப் பார்த்தது.

*(யாவும் சிந்தனை)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்





எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பல சபைகளைக் கைப்பற்றும் நடவடிக்கை நீண்ட நாள்களாகத் தொடர்கிறது. பிரதானமாக ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் தொடர்ச்சியாகச் சந்தித்து வருகின்றன.

சில நாள்களுக்கு முன் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மதுமபண்டாரவின் வீட்டில் சந்திப்பொன்று இடம்பெற்றது. அதில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் அதன் தலைவர் சஜித் பிரேமதாஸ, ரஞ்சித் மதுமபண்டா மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் தலதா அத்து கோரல,சகல ரத்நாயக்க மற்றும் வஜிர அபயவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டனர். இதில் 136 சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. இதனைத் தொடர்ந்து அதே நாள் கொழும்பு அமாரா ஹோட்டலில் மற்றுமொரு கூட்டம் இடம்பெற்றது. அதில் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அந்தக் கூட்டம் தொடர்பில் யாரும் ஊடகங்களுக்கு எதுவும் சொல்லவேண்டாம் என்று சஜித் எல்லோரிடமும் விநயமாகக் கேட்டுக்கொண்டார். அவர்களும் சரி என்றனர்.

## சஜித்தை வீழ்த்த ரணிலின் ‘கேம்’

என்னதான் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றுசேர்வதற்கு இணக்கம் காணப்பட்டாலும் ரணிலின் இலக்கு வேறுதான்.

ஒன்றுசேர்ந்து சஜித்தை பலவீனப்படுத்துவதுதான் அவரின் திட்டம். அதை மெய்ப்பிப்பதுபோல் ஒரு வேலை செய்தார் ரணில் ஐக்கிய மக்கள் சக்தியைத் தவிர ஏனைய எதிர்க்கட்சிகளை அழைத்து கூட்டம் ஒன்றை நடத்தினார். மொட்டுக்கட்சி சார்பில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட சிலர் கலந்துகொண்டனர். சுதந்திரக் கட்சி சார்பிலும் சிலர் கலந்துகொண்டனர். இந்தச் சந்திப்பில் தனது சதித் திட்டத்தை அம்பலப்படுத்தினார் ரணில்.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சி அமைக்கும்போது அந்தந்தக் கட்சிகள் எடுத்த வாக்கு வீதத்துக்கு ஏற்ப பதவிகள் வழங்கப்படவேண்டும் என்று ஒரு குண்டைப் போட்டார். அதாவது,கோட்டா முறைமை.

## சுற்றிவளைத்த மீடியாக்கள்



ஊடகங்களுக்கு அறிவிக்கவேண்டாம் என்று சஜித் கூறிய போதும் அதில் கலந்துகொண்ட யாரோ சத்தமில்லாமல் ஊடகங்களுக்குத் தகவலை எத்திவைத்துவிட்டனர்.

அவ்வளவுதான் அத்தனை ஊடகங்களும் அங்கு வந்துவிட்டன. இதை அறிந்த சஜித், “நான் சொல்லியும் கேட்காமல் யாரோ மீடியாக்கு சொல்லிட்டீங்க. சரி, இங்க நடந்த எதையும் அவங்களுக்குச் சொல்லவேண்டாம்” என்றார். எல்லோரும் அப்படியே நடந்துகொண்டனர். கடைசியில் எவரும் வாய்திறக்காததால், ஏமாந்துபோயின மீடியாக்கள்.

எம்.முபாறக்

## இதுதான் சஜித்துக்கான அடி

எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்தாலும் தனது கட்சியில் இருக்கின்ற உறுப்பினரே தவிசாளராக வரவேண்டும் என்ற சஜித்தின் ஆசைக்கு பெரும் அடி இது. ரணில் இதைக் கூறியதும் அந்தந்த சபைகளில் ஐக்கிய மக்கள் சக்தியைவிட அதிகமாக வாக்குகளைப் பெற்ற கட்சியினர் நிச்சயம் தவிசாளர் பதவிகளைக் கேட்பார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும்போது அதிகமான சபைகளில் ஐக்கிய மக்கள் சக்தி தவிர்ந்த ஏனைய கட்சிகள்தான் ஆட்சி அமைக்கும்.

இது ஐக்கிய மக்கள் சக்தியின் பலத்தைக் குறைத்துக்காட்டும். இதுதான் ரணிலின் தேவை. ரணிலின் இப்படியான ‘உள்ளடி’ வேலை காரணமாகத்தான் பல சபைகளை இந்த மாதம் 2 ஆம் திகதி அமைக்க முடியாமல் போனதாம்.



## யார் அந்த கறுப்பாடு ?

ஊடகங்களுக்குச் சொல்லவேண்டாம் என்று சொல்லியும் ஊடகங்களுக்கு அறிவித்த அந்த கறுப்பாடுகள் யாரென்று கண்டு பிடிக்க வேண்டும் என்று தனது ஆட்களுக்கு உத்தரவிட்டார் சஜித்.

அவர்கள் தேடிப் பார்க்கையில் சிலர் சிக்கினர்.

அவர்கள் வேறு யாருமல்லர் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைவதை விரும்பாத சிலர் தானாம். கூடவே இருந்துகொண்டு நடப்பதை அவதானித்து ஊடகங்களுக்குத் தகவல் கொடுத்து இணைவை அவர்கள் தடுத்துவருகிறார்களாம். இவர்கள் விடயத்தில் மிகவும் விழிப்பாக இருக்கிறாராம் சஜித்.




## சஜித் அதிர்ச்சி

அமாரா ஹோட்டலில் நடந்த கூட்டத்தில் மொட்டுக் கட்சி கலந்து கொள்ளாததால் அவர்களுடன் தனியாக ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு தனது செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவிடம் கூறினார் சஜித். மத்துமபண்டார மொட்டுத் தரப்புடன் தொடர்புகொண்டு பேசியபோது அவர்கள் எதிர்க்கட்சி அலுவலகத்துக்கு வர மறுத்துவிட்டனர். இதனால் அவர்கள் கூறும் இடத்துக்குச் செல்வதற்கு இசைந்தார் சஜித். கூட்டம் ஆரம்பமானது. சஜித் சற்றும் எதிர்பார்த்திராத ஒன்று அங்கு நடந்தது. அதுதான் 'கோட்டா' முறையில் தங்களுக்கு தவிசாளர் பதவிவேண்டும் என்ற மொட்டுக்கட்சியின் கோரிக்கை. இங்கே நன்றாக வேலை செய்திருக்கிறது ரணிலின் திட்டம். இதனால் அதிர்ந்துபோன சஜித், கட்சியுடன் பேசி பதில் தருகிறேன் என்று சொல்லி விட்டுக்கிளம்பி விட்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய தமிழ் இலக்கியங்களில் புத்தபெருமானின் போதனைகள்



07

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
நிகழ்ச்சித்திட்டத் தலைவர்,
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்,
முகாமைத்துவ அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

*தண்டாமரையின் உடன்பிறந்தும்*
*தண்டேன் உணரா மண்டுகம்*
*வண்டே கானத் திடையிலிருந்து*
*வந்தே கமல மதுவுண்ணும்*
*பண்டே பழகியிருந்தாலும்*
*அறியார் புல்லோர் நல்லோரை*
*கண்டே களித்தங் குறவாடித்*
*தம்மிற் கலப்பர் கற்றோரே*

(விவேகசிந்தாமணி)

தாமரையும், தவளையும் ஒரே தடாகத்திலிருந்தாலும் தாமரையிலிருந்து வருகின்ற சுவையான தேனின் அருமையினை அதே தடாகத்தில் வாழும் தவளை அறிவதில்லை. எங்கேயோ (பிறிதோர் இடத்தில்) வாழ்கின்ற வண்டு அத்தாமரையில் சுரக்கின்ற தேனை அருந்தும். அதனைப்போலதான் அறிவற்றவர்களினால் அறிவார்ந்தவர்களின் பெறுமதி உணர்ந்துகொள்ளப்படாதபோது அவர்களினால் தமது அறிவினை வளர்த்துக்கொள்வது கடினமாய் அமையும். இதுபோன்றே முனைப்பாடியார் இயற்றிய அறநெறிசாரத்தில் 311 பாடல்களில் கற்றவர்களுடன் சேரும் மூடர்கள் எல்லோரும் அறிவாளிகளாக மாற்றமடைவதில்லை என்பதற்கு நீரினுள் ஆழ்ந்துகிடக்கும் கல்லானது எப்பொழுதும் இழகிக்கொள்வதில்லை என்பதனை உவமையாகக் காட்டுகின்றர். அது எப்போதும் கடினமானதாகவே காணப்படும். அதுவே கல்லின் இயல்பாகும். முனைப்பாடியார் இங்கு கல்லினை அறிவற்றவர்களுக்கு ஒப்பிட்டுள்ளார்.

"வைகலும் நீருட் கிடப்பினும்
கல்லிற்கு"

எனத் தொடங்கும் பாடலில் இவ்வாறான தம்மபதத்தின் பேதை இயல்பின் 63, 64, 65 சூத்திரங்களின் பிரதிபலிப்புகள் காணப்படுகின்றன. "பொன்னே கொடுத்தும் புணர்தற்கு அரியாரைக்" எனத் தொடங்கும் நாலடியாரின் 162ஆவது பாடலில் பொன்னை அன்பளிப்பாக அள்ளிக்கொடுத்தலும் அணுகமுடியாத அதாவது நிலையற்றது என உணர்ந்து அவற்றின்மீது மதிப்புக்கொள்ளாத, எதற்கும் விலைபோகாத அறிஞர்கள் சூழ இருந்தாலும் "பேதைகளினால்" நன்மையினைப் பெறமுடியாது என்கின்றார் நாலடியார். அறிவினைப்புரிதல் என்பது முன்னர் குறிப்பிட்டது போல் அறம்சார்ந்த தவத்தினாலேயாகும். ஒருவன் தன்னை மனிதப் பண்புகளுடன்கூடிய அறிவாளியாக்கிக் கொள்ள சுயம் உணர்தல் (தன்னைத்தானே உணர்தல்) அவசியப்பாடுடையது. கௌதமரும் சுயம் உணர்தலை வலியுறுத்துகின்றார்.

மேலும் கௌதமரின் பார்வையில் அறிவாளிகள் தமக்குத் தாமே பகையாளர் ஆகின்றனர்.

### 1.3.2 நிலையாமை

சமண, பௌத்த மத சிந்தனைகள் வட இந்தியாவிலிருந்து தென் இந்தியாவுக்குள் புகுந்ததுக்குப் பின்னர்தான் நிலையாமை குறித்த கருத்துருவாக்கங்கள் தமிழ் இலக்கியங்களில் முதன்மைப்படுத்தப்பட்டன. (தட்சிணாமூர்த்தி, 2021, வேலுப்பிள்ளை, 2008). புறநானூற்றில் நிலையாமை என்ற கட்டுரையில் பேராசிரியர் வேலுப்பிள்ளை குறிப்பிடுகையில், சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் இல்வாழ்க்கையில் அதிகமான நாட்டம் கொண்டவர்களாக அதாவது "குடியும் குடித்தனமுமாக" லௌகீக இன்பங்களில் அதீத அக்கறையுடையவர்களாகவும், மறுமையினைப் பற்றிய சிந்தனையற்றவர்களாகவும் இருந்தனர் என்ற கருத்தும் இங்கு நோக்கப்படுகின்றது. ஆன்மீக வாழ்க்கை பற்றிய புரிதலை ஏற்படுத்திக்கொள்வதற்கு இவ்வாறான லௌகீக வாழ்க்கை பற்றிய அதீதமான ஈடுபாடு தடையாக அமைந்தது. இவற்றிலிருந்து விடுபட்டு ஞானம் அதாவது அறிவுநுட்பம் பற்றிய புரிதலினை ஏற்படுத்திக்கொள்வதற்கு நிலையாமை பற்றிய விழிப்புணர்வு தேவைப்படுகிறது. புத்தரின் தத்துவங்கள் ஆன்மா, அன்பு, மனம் போன்றவற்றினைக் கூறுவது போல் நிலையாமைத் தத்துவங்களினையும் அழகாகக் காட்சிப்படுத்துகின்றது.

தம்மபதத்தில் உலகவியல் என்னும் அத்தியாயத்தில் "யதா புப்புலகம் பஸ்ஸே யதாபஸ்ஸே மரீசீகம்" எனத் தொடங்கும் 170ஆவது சுலோகத்தில் இவ் உலக வாழ்க்கையின் நிலையின்மை யினை "நீர்க்குமிழி" மற்றும் "கானல்நீர்" போன்றவற்றுடன் ஒப்பிடுகின்றார். இவ்வுலக வாழ்க்கை நிரந்தரமற்றது. உலகியல் இன்பங்கள் ஒருபோதும் விடுதலையைத் தரமாட்டாது என எண்ணி வாழ்க்கையினை வாழ்தல்வேண்டும். இறை நினைவுடன் பற்று அற்று நல்லறம் நெறி விழிப்பு ணர்வுடன் உறுதியான வாழ்க்கைப் பயணத்தினை மேற்கொள்ளவேண்டும்.

ஆடம்பரமான, மற்றும் சகலபொருட்செல்வங்களுமுடைய வாழ்க்கையினை மூடர்கள் ஆராதிப்பார்கள். ஆனால் அறிவுடையவர்கள் ஞானத்தினை மட்டுமே நம்புவார்கள். இத்தகைய நிலையாமை பற்றிய கருத்துகள் தமிழ் இலக்கியங்களில் குறிப்பாக சங்க இலக்கியங்களிலிருந்து நவீனகாலத்து இலக்கியங்கள் வரை வியாபித்துக் காணப்படுகின்றன. இதற்கு பல இலக்கியங்களில் ஆதாரங்கள் காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் மிக முக்கியமான ஒரு தொகை நூலான புறநானூற்றில் நிலையாமை குறித்த கருத்துகள் பல பாடல்களில் காணப்படுகின்றன. இதற்கு உறையூர் முது கண்ணன் சாத்தனார் என்னும் புலவர் இயற்றிய 27ஆவது புறநானூற்றுப்பாடல் எடுத்துக்காட்டாக அமைகின்றது.

*தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையம்,*
*மாய்தல் உண்மையும், பிறத்தல் உண்மையும்,*
*அறியா தோரையும், அறியக் காட்டித்,*
*திங்கள் புத்தேன் திரிதரும் உலகத்து...*

*(புறம் 27:1114)*

வாழ்க்கையின் நிலையாமையினை மன்னனுக்கு (சோழன் நலங்கிள்ளி) எடுத்துரைப்பது போன்ற இப்பாடலில் மன்னன் ஒருவன் செய்கின்ற தான, தர்மங்கள் அதாவது வாரி வாரி வழங்குவதனால் கிடைக்கின்ற கீர்த்தி மாத்திரமே நிலையானதாக அமைகின்றது என நிலையாமைத் தத்துவத்தினை விளக்குகின்றார். அதற்கு வானில் தோன்றுகின்ற நிலவினை ஒப்பிடுகின்றார்.

அதாவது நிலவு எவ்வாறு சில காலத்தில் தேய்ந்தும், சிலகாலத்தில் வளர்ந்தும், சில நாள் களில் வானில் மறைந்தும் பின் பிரகாசிக்கன்றதோ அதேபோலதான் இவ்வுலக வாழ்க்கையில் மனிதர்கள் சிற்றின்ப அல்லது இல்லறவாழ்வுக்கு அதீத முக்கியத்துவம் கொடுக்காது இவ்வுலகிலிருந்து கொண்டு மறு உலகிற்கு பயன் சேர்க்கும் அறம்சார் வேலைகள்மீது கவனஞ்செலுத்துதல் வேண்டும் - என்கிறார்.

*(தொடரும்)*

## உணர்ப்திணம்

பாகம் 3

இராகவன்

சுஜாதா தனக்குப் பிடித்த எழுத்தாளர்கள் என நேர்காணலொன்றில் குறிப்பிட்டிருந்த இருவரில் ஒருவரான குளச்சல் ஜோர்ஜ்ஜை ஒருமுறை தனது வீட்டிற்கு வருமாறு அழைத்திருந்தாராம். அந்த அழைப்பை ஏற்று அவர் சுஜாதா வீட்டுக்குப் போனபோது வீட்டினுள்ளிருந்து ஓர் அல்சேசன் நாய் குரைத்துக்கொண்டு பாய்ந்துவர பயந்துபோன குளச்சல் ஜோர்ஜ் அங்கிருந்த சோபா செற்றியில் ஏறிக்குந்தியிருந்தாராம்.

நாயைப் பின்தொடர்ந்து வந்த சுஜாதா நாயின் பெயரைச் சொல்லி அழைத்து (நாயின் பெயர் நினைவுக்கு வரவில்லை) "லேடவுண்" என்றதும் அது அடங்கியொடுங்கி நிலத்தில படுத்துவிட்டதாம். பின்னர் குளச்சல் ஜோர்ஜ் குமுதத்தில் ஒரு துணுக்கு எழுதும்போது, எழுத்தாளர் சுஜாதா வீட்டில் ஓர் அல்சேசன் நாய் இருக்கிறது. அது என்னதான் மூர்க்கத்தோடு பாய்ந்து வந்து குரைத்து ஆர்ப்பாட்டம் செய்தாலும் அவர் லேடவுண் என்று சொன்னதும் பொட்டிப் பாம்பாக அடங்கி நிலத்தில் படுத்துவிடுகிறது என எழுதியிருந்ததும் நினைவிருக்கிறது.

சுஜாதா தனக்குப் பிடித்த எழுத்தாளரென இரண்டாவதாகக் குறிப்பிட்டிருந்த சுந்தரராமசாமியின் படைப்புகளைத் தேடத்தொடங்கினேன். அது உடனே கிடைத்துவிடவில்லை. ஆனால் நான் எதிர்பாராதவிதமாகப் பிறிதொரு வழி திறந்தது.

32

1990களின் பிற்பகுதி தொடங்கி 2000களின் முற்பகுதி வரை சென்னை வானொலி நிலையம் "புதினப் பக்கங்கள்" என்றொரு நிகழ்ச்சியை நடத்திவந்தது. அந்நிகழ்ச்சியில் ஒவ்வொரு பிரபலமான எழுத்தாளர்களின் நாவல்களையும் அக்கமங்கமாகப் பிரித்து அரைமணித்தியாலம் வாசிப்பார்கள். அந்நிகழ்ச்சியில்தான் நான் சுந்தரராமசாமியின், "குழந்தைகள்; பெண்கள்; ஆண்கள்" எனும் நாவலை முழுமையாகக் கேட்டேன். அந்த நாவலை வாசித்தவர் 'ராமசாமி சுதர்சன்' எனும் குரல் விற்பன்னர். அவர் ஒவ்வொரு கதாபாத்திரங்களும் உரையாடும்போது அப்பாத்திரத்தின் இயல்புக்கேற்ப அந்தக் கதாபாத்திரமாக மாறிக் குரல் கொடுப்பார். அதைக் கேட்பது பெரும் பேறு எண்டுதான் சொல்லவேணும்.

நாவலைச் சாதாரணமாக வாசிக்கிறதுக்கும் இப்பிடி கேக்கிறதுக்கும் நிறைய வித்தியாசமிருக்கு. புதினப் பக்கங்களை வாசிப்பவருக்கு ஒரு தனித்திறமை இருக்கவேண்டும். ராமசாமி சுதர்சனுக்கு அந்தத் திறமையிருந்தது. அதனால் இன்றைக்கும் எனக்குக் குழந்தைகள் பெண்கள் ஆண்கள் நாவலில் வரும் எஸ்.ஆர். எஸ், ஆனந்தம் மாமி, செல்லப்பா, வள்ளி, பாலு, லச்சம், ஸ்ரீதரன், மெத்யூ தரகன், முண்டன் மாதவன் போன்ற கதாபாத்திரங்களை மறக்கவேமுடியவில்லை. இந்த நாவலை வானொலியில் கேட்காமல் தனியே வாசித்திருந்தால் நினைவில் நிலைத்திருக்காது. அந்த வகையில் இந்தப் புதினப்பக்கங்கள் நிகழ்ச்சி முக்கியமானதொன்று.

இப்போது ஒலிபரப்பாகிறதோ தெரியவில்லை. எங்கட ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வாயிலாக எத்தனை நிகழ்ச்சியளைக் கேட்டிருக்கிறன். தனியார் வானொலிகளிலயும் எத்தனை நிகழ்ச்சியளைக் கேட்டிருக்கிறன். எல்லாம் வெறும் பொழுதுபோக்காகச் சுருங்கிட்டுது. புதினப் பக்கங்கள் நிகழ்ச்சிக்கு நிகரா இதுவரை நான் எதையும் கேட்டதில்லை.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேகலை

போரின் கவிதை

15

அவள் நினைவிலிருப்பது......
அப்பா தினமும் கடலில் இருந்து
இழுத்து வருகிற நீண்ட வலை
அம்மாவின் கூந்தலைப்போல அழகு
தம்பியும் தங்கையும்
சோற்றுக்காகத் தவமிருக்கும் வறுமை...
மதியச்சோற்றை சண்டையிட்டு
இரவுக்காக எடுத்துச் செல்லும்
பசிக்கொடுமை...வெறும் வயிற்றோடும்,
உப்புக்கடலில் வலை போடும் அப்பா ...
காலைப் பொழுதில் அவர் வரும் வரை
கடல் பார்க்கும் தாய்.....
அப்படியொரு காதல் இருவருக்கும்.
ஒரு நாளேனும் நிம்மதியாக
அவள் உறங்கியதில்லை......
அவளுக்கு நிலவைப் பிடிப்பதில்லை
தம்மைப் பிரிக்க வருகிறதென்பாள்.
எச்சரிக்கைச் செய்தியென்றால்..
விரும்பிப் படிப்பாள்... அச்செய்தி
'கடலுக்குப் போகாதே' என்றால் ...அன்று
அவள் முகம் மலரும்...
அப்போது மேகலைக்கு வயது பத்து....
அம்மாவுக்கு அவள் இளவரசி...
ஓலை வேலிக் குடிசை....வானம் பார்க்கும் வீடு..
மழை நேரங்களில் ....பக்கத்து தேவாலயம் தஞ்சம்...
வெயில் பொழுதில் ...
அவள் வீடு சொர்க்கம்.... வானத்து நிலாவும்,
புடை சூழ்ந்த நட்சத்திரங்களும்..
அழகென்றாலும் அப்பா இல்லாத இரவுகள்...
வெறுமையாக இருக்கும்.....
எப்போதும் வேலைசெய்யும் அப்பா!
ஓய்வில்லாமல் ஓடி ஆடும் வாழ்வு..
முப்போதும் மீன் குழம்பு...மணக்கும்
மனமோ கோழிக் குழம்புக்கு ஆசைப்படும்..
அம்மா அதற்கு குறை வைக்கவில்லை..
மீனை விற்றுக் கோழி வாங்கிக் குழம்பு.
அன்றொரு நாள் அம்மாவின் அவலம்
ஊரை எழுப்பியது....புதிதாக இருந்தது.
வானக் குண்டுகளுக்கு ஒதுங்க அபாய ஒலி எழுப்பும் ..
அம்மா.... உயிர் போனதாகக் கத்துகிறாள்...
தம்பியையும் தங்கையையும்...
கையில் பிடித்து மேகலை ஓடுகிறாள்.......
இரத்த வெள்ளத்தில் படகுகள் கரையொதுங்க...
சனங்கள் கூடிக் கத்துகின்றனர்...
வானக் கிபிர், மீன் பிடித்த அப்பாவிகள் மீது
கொட்டியது குண்டுகளை.
துண்டு துண்டாக ...உடல்கள்
சிதறிக் கிடந்த கோலம்... இது என்ன?...
சதைத் துண்டுகள்....படகெல்லாம் பரவிக்கிடக்க
அப்பாவை எங்கு தேடுவது?....
அம்மா ஓடி ஓடித் தேடுகிறாள்...
கால் என்கிறாள்..கை என்கிறாள்....
கண் என்கிறாள்...... வயிற்றின் பகுதி என்று..
கைகளால் கூட்டி அள்ளுகிறாள்....
ஒரு பைத்தியம் போல கத்துகிறாள்..
மயங்கிச் சரிகிறாள்....
நிலைமை புரிந்து...குழந்தைகளும் அழுகின்றன.
அவர்களை வாழவைக்க
இரவு முழுவதும் கடலில் நீந்தும்
ஒரு தொழிலாளியின் வாழ்வு
துண்டங்களாகி..சிதறி..சின்னாபின்னமாய்..
ஏன் ? ஏன்? இப்படிச் செய்தார்கள்?
அந்தப் பிஞ்சு வயதில்...
மேகலையின் உள்ளத்தை யாரோ கைகளால்.....
கசக்கி பிழிவது போல....

மூளை எதையோ எல்லாம் யோசித்து முடித்தது....
அப்பா இல்லாத நாட்கள்
ஆமையாக நகர்ந்தன...
உயிருள்ள பைத்தியமானாள் தாய்.
அவளைத் தேற்ற முடியவில்லை
காலம் அவளிடம் மண்டியிட்டித் தோற்றது..
அதற்குப்பிறகும்...எத்தனை குண்டுகள்
வான் பிளக்கும் அதிர்வுகள்...
கடல் நடுங்கும் பீரங்கிகள்.....
அப்பாவிகளை வாழவிடாமல்
அலைக்கழிக்கும்........தொடரும்
போர்! போர்! கொடிய போர்!
பீரங்கிகள் கொந்தளித்தன...மீண்டும்
வானம் பிளக்கும் வெடிவகைகள்..
தேவனிடம் ஒரு நாள் சரணடைந்தார்கள்....
கடவுளின் வாழ்விடம் எனும்
கருணைகூட இல்லை
கொட்டித்தீர்த்தன கொடுமை
குழந்தைகள்... முதியவர்... வறியவர்
பேதமில்லாத் தண்டனைகள்...
அங்கு மேகலையின் தங்கையும்...
தலை சிதறிப் பலியானாள்.
அவள் தாயின் நிலை என்ன?
மேகலையின் மனநிலை .........
தாயையும் தம்பியையும் கொண்டு
காப்பாற்றும் இடம் தேடிக்கொண்டாள்?
அன்று அவள் சபதம்...'சாவேன் சிதறி' என்று..
மனம் பொல்லாதது...
அது நினைத்த போது சாதித்தே தீரும்
வாழ மனமில்லை....மாளும்போது....
அவர்களின் நினைவோடு மாள்வேன் என்றது
இன்று அந்த நாள்.. அவள் கனவு நிறைவேறும் நாள்
இன்று அவள் பயணம் ஆரம்பம்.....
மரணத்தை நோக்கிய பயணம்...
அப்பாவின் முகம்...தங்கையின் பிஞ்சு விரல்
சிரித்துக்கொண்டு வரவேற்கின்றன....
அவர்களைக் காண மேகலை புறப்படத் தயாராகிறாள்.
கொதித்து ஆர்ப்பரிக்கும்..கோபங்கொண்ட கடல்.
அதன் மடியில் படகோட்டும் பெண்ணானாள்....
தந்தையின் வீரம்..வக்கிரச்சாவு காட்டிய வலிமை....
பழிதீர்க்கும் உத்வேகம்...
கோடுகளைத் தாண்டி நீண்ட நாளாயிற்று...
ஒரு பெண் இப்படி இருக்கமுடியுமா?
என்ன வலிமை...மனவுறுதி?
சுற்றியிருந்தவர்கள் சிந்தித்தார்கள்.
காலம் அவள் மீது இதைக் கட்டாயமெனத் திணித்தது.
இந்த வலிகளை யாரும் வாங்கிக்கொள்ள முடியாது.
எதிரிக்குக்கூட இது கொடுமை....
அப்படித்தான் அவர்கள் வாழ்வு இருந்தது...
மீனவனின் வாழ்வைக்கூறுகளாக்கிய கொடூரம்
மேகலையின் வாழ்வை மாற்றி
ரணப்படுத்தி..... நிலைமாற்றத் தயாராயிற்று....
தற்கொலை.. சுயநல முடிவு!...
திடீர் முடிவு...உணர்வின் தகிப்பு..
தூக்குத்தண்டனை... வேறு...
அங்கு வாழவேண்டும் என்கிற ஆசை
அடிமனதில் வாழும்.....அது
வாழ விரும்பும் உயிரை
மனிதர்கள் சேர்ந்து ..மரணத்தின் வழி சேர்த்தல்....
இது வேறு.....
நீண்ட நாள் வேண்டுதல்...
நேர்த்தி....நிறைவேற்றும் போராட்டம்....
இது பாதிக்கப்பட்டவர்களுக்காக நியாயம்
தூர இருந்து இயக்கும் இயந்திரங்கள் அன்றில்லை.
மனிதன் குண்டேந்தும் இயந்திரமாய்...
கடலலை மீது...படகுடன் பறப்பவள்..
எந்த அலையும்.. கட்டுக்குள்..அடங்கும்!
அசுரவேகம்.... மிகுந்த மிடுக்கு...
கடல் நங்கையாக... காலம் வைத்த காவல்..
புறப்படத்தயாராகிறது.....
மேனியெங்கும்...குண்டுகள் கட்டப்படுகின்றன.
உருவம் அடையாளப்படமுடியா ஆயத்தம்..
அவளுக்குத்தெரியும்.....ஆனால்
வரலாறு மறக்காதெனும் எண்ணம்..
அம்மா புரிந்துகொள்ளும் நிலையிலில்லை.
மனநலகாப்பகம் அவளைப் பார்த்துக்கொள்கிறது..
அவளின் நினைவுகள் திரும்பவில்லை..
தம்பியும் தனக்கான பாதையை அமைத்துவிட்டான்...
இந்தக்குண்டுகள் வெடிக்கும்போது...
என்ன உணர்வுகள் என்பது அவளுக்குத் தெரியாது!.
ஆனால் போரின் கவிதையாய்.....
வாழ்வுக்கான அர்த்தத்தை அது வழங்கும் என நம்பினாள்.
அவள் பூச்சூடவில்லை...
பொட்டிடவில்லை... மணமேடை காணவில்லை
மாங்கல்யம் இல்லை......
கழுத்தில்...விஷக்குப்பி....கட்டிய வெடிகுண்டு...
காலனிடம் கைகுலுக்கப் புறப்படுகிறாள்..
பெண்ணிடம் இப்படி ஒரு தைரியம்...
இந்த வரலாறு எந்தத் தேசத்தில் இருக்கிறது?.
எங்கள் தேசத்தில்தான் அது எழுதப்பட்டிருக்கிறது.
சம்பிரதாயங்கள்....சாட்சிகளைத் தாண்டி...
ஓர் உயிருள்ள செயற்கை நுண்ணறிவு..
படகை இயக்குகிறது......
வேகம் ..காற்றை விரட்டி அலைகளைத் துரத்தி...
ஆவேசமாகப் பறக்கிறது........
நீண்ட தொலைவில்....ஒரு பொட்டுப்போல
அசைகிறது......தீக்குச்சி உரசிய பொறி எழுந்து...
பிரகாசித்து....தன்னைச்சுற்றி...படர்கிறது..
மோதித்தள்ளிய பெருநெருப்பு.....
வான வீதியில்...அள்ளி எறிகிறது.....
மேகலை அப்படியே அழிந்து காற்றுடன் காற்றாக..
அப்பாவின் வாசம் தேடி..
தங்கையின் உயிரைத்தேடி...கடலுடன் கலந்து...
ஒரு நொடியேனும் பயமின்றி...
கருணையெனும் தாய்..ஒரு வம்சத்தை பெருக்கும்
பெண் விளக்கு.....அணைத்துப் பாலூட்டி...
தாய்ப்பாசம் உணர்த்தும் மார்பகங்கள்......
குண்டுகள் கட்டி வெடித்துச் சிதறி...
இது காலம் உருவாக்கியது....
குழந்தைகளின் இதயங்களில்
வடுக்களை விதைத்து ....வன்முறைகளை
அறுவடைசெய்து....
தாய்மையே வேட்டைக்குப் புறப்படும்
கொடிய காலங்களை...
இந்தப்போர் தந்துவிட்டுப் போயிருக்கிறது....
மேகலையின் கவிதை அவள் எழுதியது...
அவளின் வாழ்வை காலம் எழுதியது..
இந்த வாழ்வும் வருத்தமும் நீங்கிப்போகும்
நிலை கேட்டு..பிரார்த்திப்போம்...
கடலலை மீது...இப்போதும் காவல் நிற்கும்..
மேகலை ...அதன் அலைகள் மீது
அசைந்து திரிகின்றாள்.....
கரையில் வந்து மோதி மோதி
தன் அன்னையைத் தேடுகிறாள்.

ஆனந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
08 ஜூன் 2025






# உழைப்பே அதிர்ஷ்டம் தரும்

ஒரு விவசாயிக்கு வயது அதிகமானதால் இறக்கும் தருவாயில் இருந்தார். தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப்பதைப் பற்றி கவலையாக இருந்தார். ஒரு நாள், அவர் தம் பிள்ளைகளை அருகில் அழைத்தார். தன்னுடைய நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக்கொடுத்தார். அதுமட்டுமல்லாமல், அந்த நிலங்களில் ஓரிடத்தில், ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக்கொள்ளும்படிச் சொல்லிவிட்டு இறந்துபோனார்.

பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்யவேண்டிய இறுதிக் காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள். அதன்பின், அவர் குறிப்பிட்ட புதையலை எடுப்பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தார்கள்.

முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஓர் அடி ஆழத்துக்கு தோண்டினார்கள். புதையல் எதுவும் கிடைக்கவில்லை. ஒருவேளை, அப்பா "இரண்டடி" என்று சொல்வதற்குப் பதிலாக "ஓரடி" என்று சொல்லிவிட்டாரோ என்ற சந்தேகத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து, மூத்தவனின் நிலத்தை இன்னும் ஓரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை. எப்படியும் புதையலைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்ற வெறியில், இரண்டாவது மகனின் நிலத்தையும் இரண்டடிவரை தோண்டினார்கள். ஏமாற்றம்தான் மிஞ்சியது.

'இவ்வளவு தூரம் வந்தபின் எப்படி விட முடியும்' என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டடி தோண்டினார்கள். மறுபடியும் ஏமாற்றமே!


அப்பா மேல் வருத்தம் வந்தாலும், அவர்கள் 'சரி.. தோண்டியது வீணாக வேண்டாம்' என்று எண்ணி, அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள். நீர் பாய்ச்சினார்கள். உரம் போட்டார்கள். உழைப்பு வீண் போகுமா? ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல். அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்குக் கொள்ளை இலாபம்.


இப்படி உழைப்பால் வரும் பயனைத்தான் அப்பா புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்துகொண்டார்கள்.

## பொது அறிவு


1. எந்த நகரத்தில் முதல் உலகத்தமிழ் மாநாடு நடத்தப்பட்டது?
   **கோலாலம்பூர் (மலேசியா)**
2. உலகின் முதல் பெண் பிரதமர்
   **சிறீமாவோ பண்டாரநாயக்கா**
3. உலகிலேயே மிகப்பெரிய தேசியக்கொடி கொண்ட நாடு?
   **டென்மார்க்**
4. பாலைவனம் இல்லாத கண்டம்?
   **ஐரோப்பியா**

## வழிகாட்டுவோம்






**எஸ்.மதுசனா**
தரம்-10B
யா/உரும்பிராய்
சைவத் தமிழ்
வித்தியாலயம்.



**வா.சர்யுகன்,**
தரம்- 8
யா/சாவகச்சேரி
இந்துக்கல்லூரி



**R.கிருத்திக்சன்**
தரம்- 2A
யா/ கொற்றாவத்தை
அ.மி.த.க பாடசாலை




**சி.ஆதித்தியன்**
தரம்- 8C
யா/ இந்துக்
கல்லூரி.



**மாணவர்களே!**

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org